# களத்தில்

(07.10.1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (171) அன்பளிப்பு: 60 p


அனைத்துலகத் தமிழீழ மக்களாகிய நீங்கள் எமது போராட்டத்திற்கு தோள் கொடுத்து உதவினால் நாம் இந்தப் போரில் வெற்றி கொள்வது உறுதி. எமது தாயகம் மீட்கப்படுவதும் உறுதி. நாம் தன்னாட்சி பெறுவதும் உறுதி.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

## கிளிநொச்சி – பரந்தன் – ஆனையிறவு

# இராணுவத் தளங்கள் மீது புலிகள் புயல்வேகத் தாக்குதல்



- ❉ 1500 ற்கும் மேற்பட்ட படையினர் பலி
- ❉ கிளிநொச்சி பிரதேசம் புலிகளின் கையில்
- ❉ 240 விடுதலைப்புலிகள் வீரச்சாவு

கடந்த 27.09.98 அதி காலை 1.30 மணி யளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணிகள் கிளிநொச்சி பரந்தன் ஆனையிறவு இராணுவத் தளங்களின் மீது பாரிய தாக்குதலை மேற்கொண்டன. தாங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் சகிதம் மேற்கொள்ளப்பட்ட புயல் வேகத் தாக்குதலால் இராணுவத்திற்கு பாரிய உயிரிழப்புக்களும் இராணுவத் தளபாட அழிவுகளும் ஏற்பட்டுள்ளது. ஓயாத அலைகள்-II என்ற குறியீட்டுப் பெயருடன் ஆரம்பித்த இத் தாக்குதலின் பின் 15 கி.மீ நீளமுள்ள நிலப்பரப்பு புலிகளின் கையில் வீழ்ந்துள்ளது. மூன்று நாட்களாக தொடர்ந்த இச் சண்டையில் கிளிநொச்சியிலிருந்து பரந்தன் வரையுள்ள காவலரண்கள் மினி முகாம்கள் என்பவற்றுடன் மூன்று நடுத்தர இராணுவ முகாம்களும் ஒரு கட்டளை தலைமையகமும் முற்றாக அழிக்கப்பட்டது. அத்துடன் ஆனையிறவு இயக்கச்சி ஆகிய இடங்களிலுள்ள ஆட்டிலறித் தளங்களும் புலிகளால் தகர்க்கப்பட்டதுடன் பாரிய ஆயுதக் கிடங்குகளும் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டன. இத்தாக்குதலில் 1500ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதோடு ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளனர். புலிகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவத்தினர் காயமடைந்த தமது சகாக்களை தூக்கிக் கொண்டு ஆனையிறவு முகாம் நோக்கி தலைதெறிக்க ஓடித் தப்பித்துக் கொண்டனர். 96ம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவமுகாம் தாக்குதலின் பின்னர் நடைபெற்ற மிகப்பெரிய தாக்குதல் இது என்பதுடன் அத் தாக்குதலை விட மும்மடங்கு வெற்றியாகும்,


## கிளிநொச்சியில் புலிக்கொடி

மகத்தான வெற்றியைப் பெற்றுக்கொடுத்த ஓயாதஅலைகள்– 2 நடவடிக்கையின் வெற்றிவிழா கடந்த முதலாம் திகதி கிளிநொச்சியில் மிகவும் எழுச்சியாகக் கொண்டாடப்பட்டது. பெரும் திரளான பொதுமக்களும் போராளிகளும் தளபதிகளும் வெற்றிப் பெருமிதத்துடன் கலந்து கொண்டனர். இவ்விழாவின்போது கிளிநொச்சியின் மையப்பகுதியில் தமிழீழத்தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் சிறப்புத்தளபதி விதுசா தேசியக்கொடியை ஏற்றிவைக்க தாக்குதல்களில் பங்கெடுத்துக் கொண்ட தளபதிகளும் உரையாற்றினர்.இவ்வேளையில் மக்கள் தமக் கிடையே இனிப்புப் பண்டங்களைப் பரிமாறினர். இன்று கிளிநொச்சிப் பிரதேசத்தில் புலிக்கொடி பட்டொளி வீசிப்பறக்கிறது விடுதலைக்கீதங்கள் விண்ணைத் தொடுகின்றன.

## 774 படையினரின் உடலங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பு

சிறீலங்கா அரசின் தரைப்பாதை அமைக்கும் திட்டத்தை ஆட்டம் காணவைத்த ஓயாதஅலைகள்—2 நடவடிக்கையின்போர்து 1500ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டமை தெரிந்ததே. இவ்வாறு கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உருப்படியான உடலங்கள் 774ஐ சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரிடம் விடுதலைப்புலிகள் ஒப்படைத்தினர். எஞ்சிய இராணுவத்தினரின் சிதைந்த உடலங்கள் விடுதலைப் புலிகளினால் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

## மாங்குளம் அண்டிய பகுதிகளில் கடும் சமர்



பரந்தன் கிளிநொச்சி ஆனையிறவு இராணுவத் தளங்கள் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல் வேகத்தை சிங்களப் படை முன்னெப்போதும் கண்டிருக்கவும் முடியாதது எதிர்பார்த்திருக்கவும் முடியாதது. மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்தில் சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் 600ற்கும் மேற்பட்ட படையினரைப் பலிகொடுத்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை ஓரிரு தினங்களில் மிகப்பெரிய உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி புலிகள் மீட்டமை சிங்கள இராணுவத்தினத்தின் நம்பிக்கைக்கு ஏற்பட்ட பலத்த அடியாகும். இந்த அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாத இராணுவத் தலைமையகம் புலிகளின் வெற்றியை மூடிமறைக்க மாங்குளத்தை நோக்கிய படைநகர்வை மேற்கொண்டது. இதன்போது விடுதலைப் புலிகள் பதிலடித் தாக்குதலை மேற்கொண்டதையடுத்து அங்கு பெரும் மோதல் வெடித்துள்ளது. இம்மோதலின்போது நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப் பட்டதுடன் பலர் படுகாயம் அடைந்தனர். தற்பொழுது இப்பகுதியில் தாக்குதல்கள் மந்தமடைந்துள்ளன. எனினும் தனது வழமையான பாணியில் சிறீலங்கா இராணுவத் தலைமையகம் பொய்ச்செய்திகளை திரித்துவிட்டுள்ளது.


**ஓயாத அலைகள் - 2 மேலதிக விபரங்கள் உள்ளே....**


**கிளிநொச்சி - பரந்தன் - ஆனையிறவு தாக்குதலின் போது களத்தில் வீரச்சாவடைந்த வீரமறவர்களுக்கு எமது வீரவணக்கங்கள்**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

'ஓயாத அலைகள் 1' முல்லை மண்ணுக்கு விடுதலை தந்தது நேற்றைய வரலாறு. பரந்தனுக்கும் கிளிநொச்சிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஊடறுப்புத் தாக்குதலாக நடத்தப்பட்ட 'ஓயாத அலை 2' கிளிநொச்சி மண்ணின் விடுதலையைப் பெற்றுத் தந்துள்ளது இன்றைய வரலாறு.

இவ் வீரவரலாறுகள் தமிழீழ மக்களுக்கு பாதுகாப்பான அமைதி கிட்டும் வரை தமிழீழ மக்களின் விடுதலை உணர்வு ஓயாத அலைகளாக எழுந்து எழுந்து தமிழ் மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளை அள்ளிச் செல்லும் என்ற உண்மையை உலக மக்களுக்கு மீண்டும் தெளிவாக்கியுள்ளன.

சந்திரிகா ஐக்கியநாடுகள் சபையில் இலங்கையில் இனரீதியான மனக்குறைகள் மட்டுமே உள்ளன என தனது இனஅழிப்பு ஆட்சியின் உண்மைத்தன்மையை மூடிமறைத்து உரையாற்றிய சப்தம் காற்றில் கலப்பதற்கு இடையில் இலங்கையில் தமிழர்கள் மீதான சிறிலங்காவின் இனஅழிப்பு உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பூதாகரமான பிரச்சினை என்ற உண்மை சிறிலங்காவின் பலமான இராணுவ வலயங்களையும் மீறி கிளிநொச்சியை மீளவும் தமிழீழ விடுதலைப்புலிகளால் மீட்ட சம்பவத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருவமழை ஆரம்பமாவதற்கு இடையில் ஜயசிக்குறுய் பாதை திறப்புப் பயணத்தை முடித்துவிடுவேன் என ரத்வத்தை தனக்கே உரித்தான பொய்யுரையை மெய்யுரையாய் பிரகடனம் செய்து வாய்வீரம் பேசிநிற்க– கடந்த 16 மாதங்களாக தொடங்கிய இடத்தையே சுற்றிச் சுற்றி அங்கப்பிரதட்சனம் செய்யும் படையினர் இது எப்படியாகுமென ஏங்கி நிற்க – பருவ மழையின் மின்னலையும் இடியையும் எதிர்பார்த்து இருந்த ஆக்கிரமிப்பாளரை கிளிநொச்சியில் எழுந்த 'ஓயாத அலைகள் 2' இடியாக மின்னலாகத் தாக்கி கிளிநொச்சியை விட்டு விரட்டி அடித்துள்ளது.

தமிழீழ மண்ணை படைபலம் கொண்டு ஆக்கிரமிப்பு இராணுவம் ஆக்கிரமித்து நிற்கலாம். ஆனால் தமிழீழ மண்ணில் ஆக்கிரமிப்பாளர்களால் நிலைத்து நிற்க முடியாது. தியாகம் செறிந்த வீரம் மிகுந்த விடுதலையை தனது இலட்சிய உறுதியாகக் கொண்ட தமிழீழ மண்ணின் ஒவ்வொரு கல்லும் ஆக்கிரமிப்பாளர் மேல் கெந்தகமாக குமுறும் வல்லமை படைத்தது. இதனை யாழ்ப்பாணக் குடாநாட்டினை சிறிலங்காப் படைகள் ஆக்கிரமித்ததினால் வன்னி நோக்கிய பாரிய இடப்பெயர்ச்சி நடைபெற்ற அதே ஆண்டு மாவீர்நாள் உரையில், 1995ல் தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் தெளிவாக எடுத்து விளக்கி சிறிலங்காவின் சந்திரிகா அரசின் மதியற்ற போக்கினை கடுமையாக எச்சரித்திருந்தார். அவருடைய சொற்களுக்கு செவிமடுக்காத சிறிலங்கா அரசாங்கம் எங்கள் தேசியத் தலைவரின் கூற்றின் உண்மையை அனுபவபூர்வமாக பலமுறைகளில் உணர்ந்துள்ளது. அதில் கிளிநொச்சி சமர் மற்றையவைகளை விட ஆழமான முறையில் தமிழீழ மண்ணில் ஆக்கிரமிப்பாளர்களால் நிலைத்து நிற்க முடியவே முடியாது என்பதை சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆணித்தரமாக எடுத்துக் காட்டியுள்ளது.

பலத்த காவல்களுடன் திகழ்ந்த கிளிநொச்சிப் பகுதியை மீட்க தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய சமரில் ஆயிரக்கணக்கில் சிறிலங்காப் படையினர் அழிக்கப்பட்டுள்ளமை தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையின் பெருமையை உலகுக்கு நிரூபித்து நிற்கின்ற அதே வேளையில் சிறிலங்கா அரசின் இராணுவத் தீர்வால் தமிழீழ மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதையும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசின் தகவல்களில் நம்பிக்கைத் தன்மை இல்லை என்பதை கிளிநொச்சி சமர் தொடர்பாக சிறிலங்கா வெளியிட்ட தகவல்களும் களம் காட்டிய ஆதாரங்களும் உலகிற்கு எடுத்து விளக்கியுள்ளமை கிளிநொச்சி சமரின் மற்றொரு முக்கியமான அம்சம். ஆயிரக்கணக்கில் சிறிலங்கா இராணுவம் அழிப்புற்ற உண்மையை சிறிலங்கா மூடிமறைக்க முயன்ற போதிலும், விடுதலைப் புலிகளால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு 22 வாகனங்களில் வவனியாவுக்கு கொண்டு வரப்பட்ட சிறிலங்காப் படைகளின் சடலங்களது எண்ணிக்கையையும், தொடர்ந்தும் சடலங்களை தேடித்தேடிக் கண்டெடுத்து விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கும் சடலங்களின் எண்ணிக்கையையும், படுகாயப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு இறந்த நூற்றுக்கணக்கான படையினரது எண்ணிக்கையையும் மூடிமறைக்க முடியாது சிறிலங்கா திணறிக் கொண்டிருக்கிறது.



## ஓயாத அலைகள் 2

பெருந்தொகையான ஆயுதங்களை விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்துள்ள சிறிலங்கா படைகளின் கையாலாகத்தனத்தின் எடுத்துக்காட்டாக பலம் பொருந்திய ஆனையிறவு இராணுவ முகாமில் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி எரிந்து சாம்பல் மேடுகளாகியுள்ள ஆயுதக் குதம் காட்சியளிக்கிறது. மற்றைய முக்கிய இராணுவ முகாங்களுடன் நவீன தொடர்புகளைக் கொண்டிருந்த கிளிநொச்சி முகாமின் வீழ்ச்சியை அடுத்து பரந்தன் இராணுவ முகாம் தனிமைப்பட்ட நிலையை அடைந்துள்ளதால் அதனது தலைவிதி எப்படியமையப் போகின்றதோ என்ற கலக்கத்தை சிறிலங்கா இராணுவத் தலைமைகளிடையும் இராணுவத்தினரிடையும் தோற்றுவித்துள்ளது. உதவிக்கு விரைந்த படைகளை விடுதலைப் புலிகள் தடுத்து தாக்கிய வியூகங்களும், காப்பாற்ற வந்த நவீன யுத்த டாங்கிகளில் இரண்டை விடுதலைப்புலிகள் தகர்த்தெறிய மூன்றாவதை விடுதலைப் புலிகளிடம் அகப்படும் நிலையில் சிங்களப் படைகளே அழித்தொழித்த சம்பவங்களும், விமானங்கள் கூட விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு படையணியின் தாக்குதலுக்கு அஞ்சி தமது முயற்சிகளைக் கைவிட்ட தன்மைகளும் சிறிலங்கா இராணுவத்தினரிடையே போரில் தாங்கள் ஒருபொழுதுமே வெற்றிபெற முடியாது என்ற உளப் போக்கினை உறுதியாக்கியுள்ளன. இயக்கச்சி பகுதியில் அமைந்திருந்த ஆட்டிலறிப் பீரங்கித் தளம் விடுதலைப் புலிகளால் ஊடுருவித் தாக்கியழிக்கப்பட்டமை சிறிலங்காப் படைகளிடையே மேலும் அச்சத்தை வளர்த்துள்ளது.

பேச்சுவார்த்தை என்ற பெயரில் தம்மை மீளமைக்கும் சந்தர்ப்பத்தை விடுதலைப் புலிகளுக்கு தாம் வழங்கப் போவதில்லை. இறுதிப் புலியை அழிக்கும் வரை போரைத் தொடரத் தாம் உறுதி கொண்டுள்ளதாக சிறிலங்காப் பிரதி பாதுகாப்பமைச்சர் பொது மேடையில் வாய்வீரம் பேசி ஒரு வாரத்துள் நடந்த கிளிநொச்சித் தாக்குதல்கள யதார்த்தத்தையும் விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையையும் உலகிற்கு நன்கு தெளிவாக்கி ரத்வத்தையின் பேச்சின் அர்த்த மற்றதனத்தை விளக்கியுள்ளது. அதே போல சந்திரிகா, விடுதலைப் புலிகளுக்கு மக்கள் ஆதரவு இல்லை என செய்துவரும் பிரச்சாரத்தின் போலித்தனத்தை தோலுரித்து காட்டும் நிகழ்ச்சியாக மீட்கப்பட்ட கிளிநொச்சியில் மக்கள் விடுதலைப் புலிகளைக் கட்டித் தழுவி உச்சிமோந்து காட்டிய அன்பான வரவேற்புகளும் அவர்களுக்கு உதவிகள் செய்ய அணிஅணியாக திரண்டெழுந்த ஆவேசமும் அமைந்தன.

கிளிநொச்சியின் விடுதலை தமிழீழப் போராட்டத்தின் வெற்றியின் அச்சவாரம். ஜயசிக்குறுய் படைநடவடிக்கையின் தோல்விக்கு உத்தரவாதம். இணைக்கப் புறப்பட்ட இடத்தையும் பறி கொடுத்து விட்டு தொடங்கிய இடத்திற்கும் போக முடியாமல் நடுவழியில் விடுதலைப் புலிகளின் உடும்புப் பிடிக்குள் சிக்குண்டு சிதறி அழியும் நிலையில் ஜயசிக்குறுய் படையினர் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்நேரத்திலாவது தமிழீழத் தேசியத் தலைவரின் கூற்றின் பொருள் உணர்ந்து தமிழீழ மண்ணில் இருந்து சந்திரிகா தனது ஆக்கிரமிப்பு படைகளை விலக்கி கொள்வாரானால் அது இலங்கைத் தீவில் வாழும் தேச இனங்கள் இரண்டிற்கும் சந்திரிகா ஏற்படுத்தக் கூடிய பல அழிவுகளை தவிர்க்க உதவியாக அமையும். அத்துடன் அமைதி வழித் தீர்வுகளுக்கு வித்தாகவும் அமையும். இல்லையேல் சத்ஜெய 1, சத்ஜெய2, சத்ஜெய3 என்ற குறியீட்டுப் பெயருடன் கொண்ட இராணுவ நடவடிக்கைகளால் பலத்த ஆளணி இழப்புகளுடன் சிறிலங்கா ஆக்கிரமித்த கிளிநொச்சியை மூன்றே நாட்களில் விடுதலைப்புலிகள் மீளவும் விடுவித்தது போல் ஏனைய தமிழீழப் பகுதிகளையும் விடுதலைப் புலிகள் மீளவும் விடுவித்து தமிழீழத் தேசத்தை மீளவும் நிறுவும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை 'ஓயாத அலைகள் 2' உலகிற்கு எடுத்துக் காட்டி நிற்கிறது. இந்நேரத்தில் இம்மகத்தான வெற்றியில் தம்மை அர்ப்பணித்த மாவீரர்கள் அனைவருக்கும் புலம்பெயர் தமிழீழ மக்கள் வீரவணக்கம் செய்து நிற்கின்றனர். ❁

# செம்மணி மரணக்குழிகள் குறித்து விசாரிக்ககோரி மக்கள் போராட்டம்

செம்மணி மரணக்குழிகள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதில் சிறிலங்கா அரசாங்கம் காட்டி வரும் அலட்சியம் யாழ்க்குடா நாட்டு மக்களை இது தொடர்பான நீதியான விசாரணை கோரி கிளர்ந்தெழ வைத்துள்ளது. சிறிலங்கா அரசாங்கம் தனது இராணுவத்தினரால் நீதி மன்றத்தில் வைத்து பகிரங்கமாக வெளியிடப்பட்ட செம்மணியில் தமிழ் மக்கள் கொன்று புதைக்கப் பட்ட விடயம் தொடர்பாக எதுவித நீதியான விசாரணைக்கான நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறி வரும் செயலினால் வெகுண்டெழுந்த யாழ்மக்கள் ஆறு பொது அமைப்புக்கள் ஒருங்கிணைந்து நடாத்திய மறியல் போராட்டத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். யாழ் கச்சேரியிலும் யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவைனியூவிலுள்ள மனித உரிமை ஆணை க்குழு யாழ் அலுவலகத்திற்கு முன்பாகவும் திலீபனின் நினைவு தினமாகிய செப்டெம்பர் 26 ம் திகதி காலை 10 மணிமுதல் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மறியல் போராட்டத்தின் முடிவில் சோமசுந்தரம் அவெனியூவிலிருந்து புறப்பட்டு ஊர்வலமாகச் சென்ற சத்தியாக்கிரகிகள் மகஜர் ஒன்றை யாழ் சிறிலங்கா மேலதிக அரசாங்க அதிபர் வைத்திலிங்கத்திடம் கையளித்தனர்.

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ் மாவட்ட காணாமல் போனோர் கைதானோர் சங்கம, நீதிக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழு, அன்னையர் முன்னணி போன்ற ஆறு அமைப்புக்கள் பங்கு பற்றிய இம் மறியல் போராட்டத்தில் பிள்ளைகளை தேடிப் பதறும் பெற்றோர்கள் கணவனை தேடித்துடிக்கும் பெண்கள் போன்றவர்கள் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டதும் அல்லாமல் நெஞ்சைப் பிழியும் சுலோக அட்டைகளைத் தாங்கி நின்றனர்.

எங்களை அன்பு செய்தவர்கள் எங்கே – எங்களது உழைப்பாளிகள் எங்கே? – காணாமல் போனவர்கள் எங்கள் உறவினர்கள் அவர்கள் பற்றிய விபரம் உடன் வேண்டும்– குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்துக போன்ற சுலோக அட்டைகளும், நீதியைத் தாமதப்படுத்தல் நீதியில்லை என்பதற்குச் சமன் – தாமதிக்கப்பட்ட செயற்பாடு செயலிழந்த தன்மைக்குச் சமன்– மழைக்கு முன் செம்மணியைத் தோண்டு போன்ற வாசகங்களும் மறியல் செய்தவர்களிடை காணப்பட்டன. பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், அருட்திரு ஜெயக்குமார் அடிகள் ஆகியோர் இச்சாத்வீகப் போராட்ட முடிவில் உரையாற்றினர். ❁

## உங்கள் தொடர்புகட்கு

**AUSTRALIA**
TCC
P O Box 375
Preston
Victoria 3072

**CANADA**
WTM
64 Eaton Avenue
Toronto
Ontario M4J 2Z5

**DENMARK**
LTTE
P.O.Box 47
7400 Herning

**FRANCE**
TCC
341 Rue Des Pyrenees
75020 Paris

**GERMANY**
TCG
Postfach 340251
51624 Gummersbach.

**ITALY**
TCC
Via Mariano Stabile - 49
90139 Palermo

**NETHERLANDS**
TCC
Grt. Hertoginnelaan-106
2517 EL Den Hagg

**NORWAY**
TCC
P.O.BOX 1699 Vika
0110 Oslo

**SWEDEN**
TCC
Glomminge Grand-25 - 3TR
16362 Spanga.

**SWITZERLAND**
WTTC
Joses Str - 110
8005 Zurich

**UNITED KINGDOM**
UTO
Eelam House
202 Long Lane
London SE1 4QB

**U.S.A**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L
Jamaica
New York 11432.



# கிளிநொச்சி நகரில் தமிழர் கொடி!

சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த கிளிநொச்சி நகரம் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. அங்கு தமிழீழத் தேசியக் கொடியான புலிக்கொடி பட்டொளி வீசிப்பறந்து கொண்டிருக்கிறது. எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து ஆக்கிரமிப்புப் படையினர் விரட்டியடிக்கப்பட்டே தீருவர் என்பது உறுதியாக நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. எதிரியின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த 15 கி.மீ. பிரதேசம் விடுவிக்கப்பட்டிருக்கிறது.

'ஓயாத அலைகள் 2' எனக் குறியீட்டுப் பெயரிடப்பட்ட 'கிளிநொச்சி மீட்புச் சமர்', 1996 ஆம் ஆண்டு யூலை மாதம் 18ம் திகதி ஆரம்பமாகி 8 நாட்கள் வரை தொடர்ந்து நடைபெற்ற 'ஓயாத அலைகள்' எனப் பெயரிடப்பட்டிருந்த முல்லைச் சமரினை விட பரிமாணத்தில் பாரியது. தற்போதைய களச்சூழலில் கிளிநொச்சியின் கேந்திர முக்கியத்துவம் பெறுமதி மிக்கது.

முல்லைச் சமரின்போது 5 கி.மீ. சுற்றளவு கொண்ட பாதுகாப்பு

**- வேந்தன் -**

அரண்களை ஊடறுத்துச் சென்று படைத்தளத்தினைக் கைப்பற்றினர் புலிவீரர்கள். கடல்வழி விநியோகத்தினை படையினர் செய்ய முயன்றபோது அதனை எதிர்த்து நின்று கடலில் பெரும் சமர் புரிந்ததுடன், அளம்பில் பகுதியில் வந்து தரையிறங்க முயன்ற படையினரையும் எதிர்த்து நின்று படையினரின் தரையிறக்க முயற்சியினையும் முறியடித்தனர். 1200க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் முல்லைத்தீவு நகரமும் முற்றாக விடுவிக்கப்பட்டது. 'ஓயாத அலைகள் 2' தாக்குதல் முல்லைச் சமரைவிட மூன்று மடங்கு கூடுதலான நிலப்பரப்பில் நடைபெற்ற சமராகும். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி நகரின் ஒரு பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பரவிப் படர்ந்திருந்த படைத்தளம் இரு நாள் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கிறது. ஆனையிறவு தளத்துடன் இருந்த தரைவழித் தொடர்பின் ஊடாக மேலதிக படையினரை அனுப்பி கிளிநொச்சி படைத்தளத்தினை மீட்பதற்குப் படையினர் மேற்கொண்ட எந்த முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. ஆனையிறவு இயக்கச்சிப் பகுதிகளில் நிலைநிறுத்தப்பட்டிருந்த ஆட்லறித் தளங்கள் அழித்தொழிக்கப்பட்டமையால் ஆட்லறி மூலம் படையினருக்கு உதவும் ஆனையிறவுப் படையினரால் முடியவில்லை. விமானப்படையினர் உதவிக்கு விரைய முனைந்தபோது விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு படையணியால் நடாத்தப்பட்ட தாக்குதலின் பின் விமானப் படையினராலும் கிளிநொச்சிப் படையினருக்கு உதவ முடியவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பின் பல்வேறு படையணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு கிளிநொச்சி—பரந்தன்—ஆனையிறவு— இயக்கச்சி ஆகிய பகுதிகளில் இருந்தும் பல்வேறு முனைகளிலும் நடாத்தப்பட்ட தாக்குதலின் ஊடாக கிளிநொச்சி நகரம் மீட்டெடுக்கப்பட்டிருக்கிறது. சமர் உக்கிரமாக நடைபெற்றபோது, ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகள் கரடிப்போக்கிலிருந்து ஆனையிறவு வரை நீண்டு நெடுத்திருந்த படைத்தளத்தினை இரண்டாக உடைத்து கிளிநொச்சிப் பகுதியெங்கும் பரவியிருந்த பல்வேறு இராணுவ நிலைகளையும் 15க்கும் மேற்பட்ட சிறு முகாம்களையும் மூன்று பாரிய முகாம்களையும் தாக்கியழித்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். முல்லைச் சமர் போல கடற்சமரை மேற்கொள்ள வேண்டிய அவசியம் 'ஓயாத அலைகள் 2' இராணுவ

**'ஜெயசிக்குறுய்' புதைந்து யாழ் குடா மீட்க**
**புலம்பெயர் கரங்கள் வாரி வழங்கட்டும்!!**

நடவடிக்கைக்கு ஏற்படாத போதும் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அடையப்பட்ட பெரு வெற்றியாக கிளிநொச்சி சமர் மீட்பைக் குறிப்பிடலாம்.

தற்போதைய களச்சூழலில் கிளிநொச்சி மிகுந்த கேந்திர முக்கியத்துவம் மிகுந்த பகுதியாக இருக்கிறது. சமர்களுக்கு எல்லாம் தாய்ச் சமர் என வர்ணிக்கப்படும் ஜெயசிக்குறு சமர் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையிலான பிரதேசத்தின் தரைவழி இணைப்பினை நோக்கமாகக் கொண்ட இராணுவ நடவடிக்கையினை சிறிலங்கா அரசு மேற்கொண்டபோதே நிகழத் தொடங்கியது. தரைப்பாதை எனும் பெயரில் தமிழீழ மக்களின் தாயகத்தின் இதயத்தினை இரு துண்டுகளாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஜெயசிக்குறு தனது இலக்கினை அடைவதற்கு கிளிநொச்சி படைத் தளத்திடமிருந்தும் உதவியினை எதிர்பார்த்துக் காத்திருந்தது. குறிப்பிட்டளவு தூரம்வரை ஜெயசிக்குறு முன்னேறும்போது ஒரு கட்டத்தின்பின் இருமுனை நகர்வின் மூலம் தமது படைகளை ஒன்றினைக்கலாம் என சிங்களப் படைத் தலைமை கருதியிருந்தது. அதாவது வவுனியாவிலிருந்து நகரத்தொடங்கிய ஜெயசிக்குறு மாங்குளத்தைத் தாண்டி முன்னேறிய பின்னர் கிளிநொச்சிப் படைத்தளத்திலிருந்தும் முன்னோக்கிய படைநகர்வு எதிர்பார்க்கப்பட்டது. ஒரு தகவலின் படி முன்னர் தாக்கியழிக்கப்பட்ட கொக்காவில் பகுதியில் இரு பகுதிப் படையினரும் இணைந்து கொள்ளும் திட்டம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்தவகையில் கிளிநொச்சிப் படைத்தளம் அழிக்கப்பட்டு கிளிநொச்சிப் பகுதி விடுதலைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பது, ஜெயசிக்குறு படை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் சிறிலங்காப் படையினருக்கு பலத்த நெருக்கடிகளையும் மனச் சோர்வையும் தோற்றுவிக்கும்.

மற்றையது, யாழ் குடாவினை தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பது தொடர்பாகவும் பலத்த சவாலை கிளிநொச்சி மீட்பு படையினருக்கு ஏற்படுத்தியுள்ளது. தற்போது பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் இருக்கும் ஒரு சிறிய இராணுவ முகாமே ஆனையிறவு முகாமுக்கு முற்காட்டி அரணாக உள்ளது. படையினருக்கு சாதகமற்ற ஒரு நிலப்பரப்பில் அமைந்திருக்கும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன முகாமினை விடுதலைப் புலிகள் இலகுவாகத் தாக்கியழித்து விடுவர் என்ற அச்சம் படைத்தரப்பினை இப்போதே ஆட்கொள்ளத் தொடங்கியுள்ளது. பரந்தன் முகாமினை ஆனையிறவு படைத்தளத்திற்கு நகர்த்தினால், ஆனையிறவுத் தளம் மீதான நேரடித் தாக்குதலுக்கு வாய்ப்புக்கள் கூடுதலாக அமைந்து விடும் என்பது படைத்தரப்பின் அச்சம். கிளிநொச்சிப் படைத்தளத்தின் பரப்பளவுடன் ஒப்பு நோக்கும்போது ஆனையிறவுப் படைத்தளத்தின் பரப்பளவு பாரியது அல்ல. மேலும் நீரேரியில் நீர் நிரம்பும் மழைக்காலத்தில் கடற்புலிகளும் இணைந்த வகையில் ஆனையிறவுப் படைத்தளம் மீது தாக்குதல் நடத்தும் வாய்ப்பு புலிகளுக்கு இருக்கிறது என்றே படைத்தரப்பு கருதுகிறது. ஆனையிறவு வீழ்ச்சியடையின் தென்மராட்சி இலகுவில் புலிகளின் கைக்குள் சென்றுவிடும் என்றும் அதன் பின்னர் வடமராட்சி, வலிகாமம் விடுதலைப் புலிகளின் வசம் செல்வதைத் தடுக்க முடியாது போய்விடும் என்றும் இராணுவத் திட்டமிடலாளர்கள் கவலை கொள்ளும் நிலையினை கிளிநொச்சி மீட்பு ஏற்படுத்தியுள்ளது.

இழந்த கிளிநொச்சிப் பகுதியினை மீண்டெடுக்க நடந்த பாரிய சமர் போராளிகளின் உயிர்த்தியாகத்துடன், போராளிகளால் நிகழ்த்தப்பட்ட அற்புத சாதனையாக இருந்த போதிலும், இச்சாதனையினை நிகழ்த்துவதற்கு உறுதுணையாக பல்வேறு வகையான உட்கட்டுமானங்கள் அமைக்கப்பட வேண்டியிருந்தது.

உதாரணமாக காயமடையும் போராளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ உட்கட்டுமானம் நிறைந்த பொருட்செலவினை ஏற்படுத்தியிருந்தது. இதனைவிட பெரும் போர்க்களத்தில் ஏற்படக் கூடிய பல்வேறு செலவுகளையும் போர்ச் சூழல் மக்களுக்கு ஏற்படுத்தக் கூடிய பல்வேறு தேவைகளையும் எதிர்கொள்ள நிறைந்த பொருளாதார பலம் தேவைப்படுகிறது.

இத்தகைய சூழலில் எமது தாயக விடுதலையை நாம் வென்றெடுக்க தேவையான பொருளாதார பலத்தினை வழங்க வேண்டியது புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் முதன்மைக் கடமையாகிறது. தாயகத்தில் வாழும் மக்களது பொருளாதாரச் சூழலில் தாயக மக்களால் தேவைப்படும் நிதி உதவியினை வழங்குவது சாத்தியமாகாது.

சிறிலங்கா அரசு வருடாந்தம் 50,000 மில்லியன் ரூபாவினை விடக் கூடுதலான தொகையினைப் பாதுகாப்புச் செலவீனங்களுக்குச் செலவிடுகிறது. வருடாந்தம் அத்தொகை மேலும் மேலும் அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுகிறது. அரசின் சொத்துக்களை விற்றும் மக்கள் மீது பாதுகாப்பு வரி விதித்தும் அந்நியக் கடன்களைப் பெற்றும் தனது பெரும் போர்ச் செலவை சமாளிக்க முனைகிறது சிங்கள அரசு.தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் தமிழீழ மக்களிடமிருந்தே பெறப்படுகிறது. போராட்டத்திற்குத் தேவையான ஆட்பலம் தாயகத்தில் வாழும் எம் மக்களிடமிருந்து போராட்டத்தைச் சென்றடைகிறது. போராட்டத்திற்கும் சிறிலங்கா அரசின் அடக்குமுறை மக்களுக்குத் தோற்றுவிக்கும் பல்வேறு தேவைகள் காரணமாக ஏற்படும் பொருளாதாரத் தேவைகளுக்கும் உரிய பொருளாதார பலத்தினை வழங்க வேண்டியது புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களது கடமையல்லவா!

சிறிலங்கா அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ள முனையும் சகல ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளுக்கும் நாம் முகம் கொடுக்க வேண்டும். இழக்கப்பட்ட எமது பிரதேசங்கள் தொடர்ச்சியாக மீட்டெடுக்கப்பட வேண்டும். அதற்கு எல்லா முனைகளிலும் தமிழீழ மக்கள் உற்சாகமாக எழுச்சியாக செயற்பட வேண்டும். புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களும் தமது கடமையினை உரிய முறையில் செய்தார்கள் என்பதனை வரலாறு பதிவு செய்து கொள்ள வைப்போம். ❃

# தமிழரின் தேசியத்தை சிதைக்க வன்னியில் சிங்களக் குடியேற்றங்கள்

*''ஜயசிக்குறு நடவடிக்கை முடிவடைந்ததும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுவார்கள்.''*

– பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்
ஜெனரல் அனுருத்த ரத்வத்த

சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் இப்பேச்சானது ஒரு அரசியல் பேச்சோ அன்றி அவரது தனிப்பட்ட கருத்தோ அன்றி சிந்தனையுமோ அல்ல. இதுவே சிங்களப் பேரினவாதத்தின் குரல். இதுவே இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து பௌத்த பேரினவாத அரசுகள் செய்து வருகின்றன. செய்ய முற்படுகின்றன.

வவுனியா-கிளிநொச்சி வரையிலான நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவுதல் வேண்டும் என்பதை பேச்சளவில் அனைவரும் அறியத்தக்க வகையில் வெளியிட்டவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்பு அமைச்சாராக இருந்த லலித் அத்துலத்முதலியாகும். அவர் திட்டமிட்டபடி இவ் வீதியின் இருமருங்கிலும் 10,000 குடும்பங்கள் குடியேற்றப்படுதல் வேண்டும் என்பதாகும்.

ஆனால், லலித் அத்துலத் முதலிதான் இச் சிந்தனையின் மூல கர்த்தாவா என்று எம்மால் கூறிவிட முடியாது. ஏனெனில் பௌத்த சிங்களப் பேரினவாத சிந்தனையாளர்கள் யாராவது இதுகுறித்து ஏற்கனவே பிரஸ்தாபித்திருக்கலாம். ஏனெனில் சிங்களப் பேரினவாதத்தின் அடிப்படைச் சித்தாந்தத்தில் தமிழர் தாயக பூமியை ஆக்கிரமித்துக் கொள்வது என்பது அடிப்படைக் குறிக்கோளில் ஒன்றாகும்.

தமிழ் மக்களின் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதற்கு இரு அடிப்படை நோக்கங்களை பௌத்த சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகக் கொண்டுள்ளது.

1. இலங்கைத் தீவானது புத்த பெருமானால் பௌத்தர்களுக்கு எனத் தத்தம் செய்யப்பட்ட பூமி என்ற சித்தாந்தம். இது இலங்கைத் தீவில் சிறுபான்மை இனத்தவர்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கின்றது.

2. தமிழர்களின் தேசிய இன எழுச்சியையும்- அவர்களின் தேசியத்தையும் சிதைத்து விடுவதற்கான ஒரே வழி தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொள்வதே ஆகும். அதாவது, இலங்கை பூராகவும் ஒரு வலுவிழந்த சிறுபான்மையினராக தமிழ் இனத்தை ஆக்கிவிடுதல் என்பதாகும்.

தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்வது என்பது - இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது ஒன்றாகும். விவசாய அபிவிருத்தி என்ற ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கையானது கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியை சிங்களக் குடியேற்றத்தின் கீழ் கொண்டு வந்தது. அதாவது குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. இதன் பெருக்கமானது கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களை சிறுபான்மை ஆக்கும் அளவிற்கு கொண்டு வந்தது எனலாம்.

சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதற்கென குடியேற்றங்களை நிறுவ முற்பட்டமையானது ஏதோ ஒரு தற்செயலாக ஆரம்பிக்கப்பட்டதொன்றல்ல. ஒரு பிரதேசத்தை நீண்ட காலத்திற்கு எவ்வாறு ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்ளலாம் என்ற ஆக்கிரமிப்புச் சிந்தனையாளர்களின் அடிப்படையில் அமைந்ததாகும்.

அதாவது ஒரு பிரதேசத்தை இராணுவ ரீதியில் ஆக்கிரமிப்பது என்பது தற்காலிக வெற்றியாகவே அமைய முடியும். நீண்ட கால நோக்கில் அது பெரும் இழப்பிற்கும் தோல்விக்கும் இட்டுச் செல்லக் கூடியதாகும். அதாவது ஆக்கிமிப்புப் பகுதியில் இராணுவத்தை நிலை நிறுத்துவது என்பது பெரும் பொருட் செலவிற்கும் அதேநேரம் நீண்ட கால நோக்கிற்கும் சாத்தியமாகவும் இருக்கப் போவதுமில்லை. இது வரலாறு கற்றுத் தந்த பாடமும் கூட.

அதாவது ஒரு அந்நிய நாட்டிலோ அன்றி பிரதேசத்திலோ ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்தினால் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க முடியாது. ஒன்று அந்த ஆக்கிரமிப்பு இராணுவம் அதற்கென பெரும் விலையைக் கொடுக்க வேண்டி இருக்கும். இறுதியில் அது வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் கட்டாயமாகவே எழும். இதுதான் வியட்னாமிலும்

**ஜெயராஜ்**

ஆப்கானிஸ்தானிலும் நடந்தது.

ஆனால், குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்படும்போது அவ்வாறான நிலை பெரும்பாலும் உருவாகி விடப் போவதில்லை. ஏனெனில் பிரதேசங்கள் குடியிருப்பாளரின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகிவிடும். காலப்போக்கில் அப்பிரதேசம் தம்மால் ஆக்கிரமிக்கப்பட்டது என்பதை அவர்கள் மறந்து அது தமது சொந்த நிலம் என உரிமை பாராட்டவும் தொடங்கிவிடுவார்கள். இதுவே அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து, தென்னாபிரிக்கா போன்றவற்றிலும் நடந்தது.

அதிலும் குடியேறுபவர்கள் பெரும்பான்மையினராக மாறிவிடும் சமயத்தில் அப்பிரதேசத்தின் பூர்வீகக் குடிகள் நசுக்கப்பட்டு விடுவார்கள். அமெரிக்காவின் செவ்விந்தியர்களும், அவுஸ்திரேலியாவில் அப்ரோஜி னிஸ்களும் இவ்வாறே நசுக்கப்பட்டனர். ஒரு வகையில் வேட்டையாடப்பட்டனர் என்றே கொள்ளலாம்.

அதிலும் குடியேற்றங்கள் திட்டமிடப்பட்டவையாகவும் ஒரு நாட்டிற்குள்ளே அன்றி ஒரு சிறுபான்மை இனத்தினர் தேசத்திற்குள்ளே ஒரு பெரும்பான்மை இனம் குடியேற்றங்களை நிறுவும்போது நிலைமை மிக மோசமாக மாறிவிடுகிறது. அதாவது ஓரிரு தசாப்தத்திற்குள்ளேயே அப்பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டுவிடுவது மட்டுமல்ல, அப்பிரதேசத்தின் மக்கள் சிறுபான்மையினராக உரிமைகள் அற்றவர்களாக மாறிவிடுகின்றனர்.

இது, ஒருபுறம் இருக்க இராணுவத்தினரால் அப்பிரதேசத்து மக்கள் விரட்டப்பட மறுபுறம் புதிய குடியேற்றத் திட்டங்கள் மூலம் ஆக்கிரமிக்கும் இனம் குடியேற்றப்படுவதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது. நவீன அரசியல் வரலாற்றில் இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனர்களின் நிலப்பரப்புக்களை ஆக்கிரமித்துள்ளமையும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் தாயக பூமியை ஆக்கிரமிக்க முற்பட்டுள்ளமையும் இதற்கு ஒரு சிறப்பான எடுத்துக் காட்டுகளாகும்.

மேலும் இவ்வாறான குடியேற்றங்கள் கூட கேந்திர நிலைகளிலும் வழமான பூமிகளிலும் மேற்கொள்ளப்படுவது உண்டு. அவ்வாறு மேற்கொள்ளப்படுவதன் மூலம் அப்பிரதேசமானது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவதோடு அப்பூமி ஆக்கிரமிப்பாளர்களினால் முற்றாகவே சுரண்டப்படும் நிலையும் அடைகின்றது. இதேசமயம் அப்பிரதேச மக்களின் தேசிய அம்சங்கள் சிதைவுபடுத்தப்படுகின்றன. இது அம்மக்களின் தேசிய அந்தஸ்த்தினை காலப்போக்கில் அழித்து விடுபவையாகவும் மாறிவிடுகின்றன.

இன்று கிழக்கு மாகாணத்தில் இவ்வாறானதொரு நிலையே உருவாகி வருகின்றது. இது தமிழரின் தாயக பூமிக்குப் பெரும் அச்சுறுத்தலாக எழுந்துள்ளது. இவ்வாறானதொரு நிலையை வன்னிப் பிரதேசத்திலும் உருவாக்க வேண்டும் என்பதே சிங்கள ஆட்சியாளர்களின் குறிக்கோளாகும். இதனை தற்பொழுது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்தவத்த வெளியிட்டுள்ள குடியேற்றம் பற்றிய அறிவிப்பு மட்டும்தான் வெளிப்படுத்துவதாக இல்லை. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் இருந்தே இதற்கான அடித்தளம் இடப்பட்டன.

அதாவது, மகாவலித் திட்டத்தின் 'எல்' வலயம் முல்லைத்தீவு மாவட்டத்தின் தென் பகுதியைப் பெரும்பாலாக உள்ளடக்கியதாக அது உள்ளது. மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் இப்பிரதேசத்தை சிங்களக் குடியேற்றத்தின் கீழ் கொண்டு வருவதே சிறிலங்கா அரசாங்கத்தின் குறிக்கோளாகும். இதன்மூலம் வன்னியின் கிழக்குக் கரையோரப் பகுதி பெருமளவில் சிங்களக் குடியேற்றத்திற்கு உட்படும் எனத் திட்டமிடப்பட்டது. ஆனால் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் அதற்கு ஓரளவு முட்டுக்கட்டை போட்டுவிட்டது.

ஆயினும் ஜெயசிக்குறு நடவடிக்கை தொடங்கிய பின்னர் சிறிலங்கா அரசாங்கம் இப்பிரதேசத்தின் ஒரு பகுதியை மணலாறு மாவட்டம் அநுராதபுரம் மாவட்டத்துடன் நிர்வாக ரீதியாக இணைத்துக் கொண்டுள்ளது. இந்த நிலையானது இப்பிரதேசத்தை குடியேற்றத் திட்டங்கள் மூலம் உடன் ஆக்கிரமிக்க முடியாத நிலையில் நிர்வாக ரீதியாக சிங்கள மாவட்டம் ஒன்றிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது எனலாம். இது எதிர்கால ஆக்கிரமிப்புக்கு என மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு ஆகும்.

இந்த வகையில் இறுதியாக சிங்கள ஆட்சியாளர்களின் முக்கிய குறிக்கோளாக வன்னியில் குறிப்பாக வவுனியா - கிளிநொச்சி நெடுஞ்சாலையில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவ உள்ளது. இக்குறிக்கோளானது தனியாக வன்னிப் பிராந்தியத்தை வெற்றிகொள்வது என்பது மட்டுமல்ல யாழ்குடா நாட்டில் இராணுவம் பெற்றுக் கொண்ட வெற்றியை உறுதி செய்து கொள்வதும் அதன் மூலம் தமிழரின் தேசியத்தை முற்றாகவே வடக்கிலும் சிதைத்து விடும்நோக்கம் கொண்டதும் ஆகும்.

வன்னிப்பிரதேசமானது சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்து எப்பொழுதும் ஒரு சவால் நிறைந்த பூமியாகவே இருந்து வந்துள்ளது. இதே சமயம் பரந்துபட்ட இப்பிரதேசமானது தமிழ் தேசியத்தின் பாதுகாப்பு அரணாகக் கூட இருந்துள்ளதெனலாம். அதாவது தமிழ் தேசிய மையமாக விளங்கும் யாழ் குடாநாட்டிற்கு வன்னிப் பிரதேசம் ஒரு பௌதீக ரீதியாக பாதுகாப்பான அரணாகவே என்றும் இருந்து வந்துள்ளது. அவ்வாறு இல்லாது விடின் சிங்கள ஆட்சியாளர்கள் வரலாற்றுக்காலத்தில் இருந்தே யாழ் குடாநாட்டைத் தமது ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்திருக்கக் கூடியதாக இருந்திருக்கும். அதாவது அவர்களின் பெரும்பான்மை அதற்கு உதவியாக இருந்திருக்கக்கூடும். இந்த வகையில் வரலாற்றுக் காலம் தொட்டே யாழ் குடாநாட்டிற்கு ஓர் இயற்கையான பாதுகாப்பினை வன்னிப்பிரதேசம் கொடுத்து வந்துள்ளது என்பதே சரியானதாகும். அதாவது யாழ் குடாநாடு சிங்களவர் ஆக்கிரமிப்பிலிருந்து தப்பித் தனித்துவமாக இருப்பதற்கு உதவியுள்ளது.

ஆனால் ஐரோப்பியரின் வருகையும் அதிலும் குறிப்பாக பிரித்தானியரின் வருகையும், அவர்கள் கொண்டு வந்த நவீன போக்குவரத்து வசதிகளும் யாழ் குடாநாட்டை ஓரளவிற்கு கொழும்புடன் அதனைத் தொடர்பு படுத்தியது எனலாம். அவ்வாறு இருந்தும் சுதந்திரத்தின் பின்னர் சிங்கள ஆட்சியாளர்களின் மேலாதிக்க சிந்தனைக்கு வன்னிப்பிரதேசம் பெரும் முட்டுக்கட்டையாக ஒரு வகையில் பெரும் சவாலான பூமியாகவே இருந்து வந்தது.

இம்மதிப்பீட்டினை மேலும் வலுவடையச் செய்வதற்காகவே தற்பொழுது வன்னிப் பிரதேசத்தில் இடம்பெறும் பெரும் சமர்கள் உள்ளன. இச்சமரானது தனியாக பேரினவாத அரசு கூறிக் கொள்வது போன்று யாழ் குடா நாட்டுக்கான தரைவழிப் பாதை திறப்பதற்கான வழி மட்டுமல்ல தமிழர் தேசியத்தை அழிப்பதற்கான வழி தொடர்பானதாகவுமே உள்ளது. அத்தோடு வடக்கில் இராணுவ வெற்றியை உறுதி செய்யும் நோக்கம் கொண்டதுமாகும்.

அதாவது யாழ் குடாநாட்டை இராணுவ ரீதியில் சிறிலங்கா அரசு வெற்றி கொண்டதாயினும் அப்பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை உறுதி செய்யவும் தமிழ்த் தேசியத்தினை படிப்படியாக சிதைவிற்கு உள்ளாக்கும் நடவடிக்கைக்கும் வன்னிப் பிராந்தியம் விடுவிக்கப்பட வேண்டிய தேவை அதற்கு உண்டு. அவ்வாறு இல்லாது விடில் அதன் விருப்பத்திற்கும் நீண்ட கால நோக்கத்திற்கும் ஏற்ற விதத்திலும் யாழ் குடாநாட்டில் தமது ஆதிக்கத்தை இராணுவ ரீதியில் தக்க வைத்துக் கொண்டதானதோ அன்றி தமிழர் தேசியத்தை சிதைத்து விடுவதற்கான அதின் குறிக்கோள்கள் சாத்தியமானது ஒன்றாக இருக்க மாட்டாது.

இந்த நிலையில்தான் வன்னிப் பெரு நிலப்பரப்பை இராணுவ ரீதியில் வெற்றி கொண்டு சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதை சிங்கள ஆட்சியாளர்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இதனை ரத்வத்த தற்பொழுது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருப்பதனால் பேசியிருக்கலாம். ஆனால், அவர் மட்டுமல்ல எந்தப் பேரினவாத ஆட்சியாளர்களும் இதனையே விரும்புகின்றனர். அதாவது, வன்னியை வெற்றி கொள்ளுதல் என்பது இவர்களது இன்றைய பிரதான குறிக்கோளாக மாறியுள்ளது எனலாம். இதுவே தமிழர் தேசியத்தையும் அவர்களின் விடுதலைப் போராட்டத்தையும் சிதைப்பதற்கும் உதவும் என அவர்கள் கருதுகின்றனர். ஆனால், வன்னிப் பிரதேசத்தின் இயற்கையும் தமிழீழப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் இலகுவில் வெற்றி கொண்டு விடமுடியாது. ❋

# பொய்யாகிப்போயின உவமைகள்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு பல்வேறு தளங்களில் நிலைநின்று மாபெரும் சாதனை களைப் படைத்து விடியலை நோக்கி வீர நடைபோடுகின்றது. இந்த விடுதலை நோக்கிய நகர்வானது வெவ்வேறு கோணங் களில் நடைபயின்று நல்லதொரு ஆற்றுப் படுத்தலில் அசாத்தியத் துணிவோடு அணிவகுத்துச் செல்கிறது. இந்த அணி வகு ப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தனித்துவமானவை. தமக்கென ஒரு புதிய புறத்தைப் படைத்து நிற்பவை.

இந்தப் புதிய புறம் படைத்தல் என்ற தன்னிகரற்ற சாதனையில் ஒன்றுதான் மகளிர்படையணியின் உருவாக்கமும் செயற்பாடுகளும் ஆகும். அன்று தொட்டு இன்று



வரை தமிழ்ப் பெண்ணும் தமிழ்ப் பெண்மையும் இலக்கிய நோக்கி லும் சரி, வாழ்வியல் நோக்கிலும் சரி பயன்பட்ட, பயன்படு த்தப்பட்ட முறைமையில் இருந்து முற்றிலும் வித்தியாசமாக வீறு கொண்டெழுகின்ற வீரவேங்கை யாக அவளை அலகின்முன் நிறுத்திய 'தலைமை' தலை வணங்குவதற்குரியது. இத்தகைய வியத்தகு தலைமையின் கீழ் ஆயிரமாயிரமாய் அணிதிரண்டு பெண்கள் படையணியாய் உருப்பெற்று உலகத்தை வியப்பில் ஆழ்த்தி அளப்பெரிய வெற்றி களைப் போர்க்களத்திலே நிகழ்த்திக் கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மகள் இருபதாம் நூற்றாண்டின் அதிசயப் பெண் தான் என்பதில் ஐயமொன்று மில்லை.

நாற்குணமும் நாற்படையாய்
ஐம்புலனும் நல்லமைச்சாய்
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசாய்—
வேற்படையும்
வளருமே கண்ணாவதன
மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு.

என்பது நளவெண்பாவிலே வருகின்ற ஒரு பாடல். புலவர் புகழேந்தி தமயந்தியின் பெண்மை எவ்வாறு அரசாளுகிறது என்ப தைக் காண்பிக்கிறார். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்களும் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நான்கு படைகளாகக் காவல் செய்ய, மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களும் நல்ல அமைச்சாக இருந்து இவளை நிலைப்படுத்த தமயந்தி அணியும், சிலம்பு முரசாக நின்று ஒலி எழுப்ப கண்கள் இரண்டும் வேலாகவும், வாளாகவும் இருந்து காவல் செய்ய, அவளது முகம் என்ற குடையின் கீழ் பெண்மை கோலோச்சுகின்றது என்பது இப்பாடலின் பொருளாகும். பெண்மையின் அரசாட்சியைக்கூற அவர் கையாண்ட உருவக அணி இப்பாடலை அழகு செய்கிறது தான் என்றாலும் ஒரு பெண் அதுவும் தமிழ்ப் பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று காலங்காலமாக எமது சமுதாயம் எதிர்பார்க்கும் அதே தமிழ்ப் பெண்ணை முன்னிலை நிறுத்தி அவளது தனித்துவப் பண்புகளை இனங்காட்டத் தவறும் தமிழ் இலக்கியப் போக்கின் நிதர்சனத்தை எடுத்துரைப்பதாகவும் கருதலாம்.

இத்தகைய ஒரு வரலாற்றுப் பார்வையில் சமுதாயம் எதிர்பார்ப்பில் நின்றும் வித்தியாச மாக களத்தில் நின்று சுடுகுழலால் பதில் கொடுக்கும் வீரத் தமிழிச்சியின் வீரச் செயல்கள் ஈழத்தமிழ் இலக்கியப் போக்கின் சமகால படைப்புகளில் கூட புதிய பரிணாமம் ஒன்றைப் படைக்கக் காரணமாகி நிற்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் படைப்பிரிவில் பெண் போரா ளியாய் நின்று மண்மீட்புப் போருக்கு தமது இன்னுயிரை ஆகுதியாக்கும் இந்த ஈழமகளிர் பெண்புலியாய், கடற்புலியாய் கரும்புலியாய் வீறுகொண்டு பாய்ந்து வெற்றிமேல் வெற்றியாய் வெடிகுண்டாய் வெடித்துச் சரித்திரத்தில் தமது வரவைப் பதிவு செய்து பெண்களின் வீரத்தை வெளிப்படுத்திச் செல்கின்றனர்.

சாதம் படைத்த கைகள் போரிலே சாதனை படைத்து நிற்கின்றன. அணிகலன்களால் அவளை அழகுபடுத்தி ஒரு கொலுப் பொம்மையாய் கொலுவிருத்தி அகமகிழ்ந்த சமுதாயம் இன்று படையணியில் அணிவகுத்துச் செல்லும் அந்த அழகு கண்டு காலத்தின் தேவை கருதி அந்த வீரத் தமிழிச்சியின் வெற்றிச் செய்திகளைக் கரம்கூப்பி வணங்கி மரியாதை செய்கிறது. அடுக்களையில் இருந்து அடுப்பூதி அடுப்பூதி உணவு சமைத்த பெண் இன்று ஆயுதப் போரில் நேர்நின்று வெஞ்சின வேங்கை யாய்ப் போராடிப் புதிய வாழ்வு சமைக்கப் புறப்பட்டிருக்கிறார்கள்.

*மலையென நிமிர்க! மலையென நிமிர்க*
*மாதவப் பேறே! மலையென நிமிர்க!*
பார் இந்த வையகப்பரப்பெல்லாம்
எம் மண்ணின்
சூர்மழுங்கா வீரக்குரல் கேட்கும்
நேரமிது.
தடுமாறாச்
சூரியத் தலைவன் வழிகாட்ட
விடுதலைப் பண்பாடி
விரித்த சிறுகொடுகால்
எட்டிமிதித்து எதிரிமுகாம்
மீதெழுந்து
தொட்டசைத்து
அங்கே தீமூட்டும் கைகளவை
உன் தங்கை கைகள் உலகத்தை
அசைக்கிறது

**2ம் லெப்.மாலதி நினைவும்**
**தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளும்**
**10 – 10 – 1998**

*கண் திறவாய்*
*நீயும் காலெடுத்து வெளிவருவாய்!*

என்று பாடிய களக்கவிஞன் புதுவை இரத்தினதுரை கூறுகின்ற எங்கள் சூரியத்தலைவனின் வழிகாட்டலில் எங்களது தமிழீழத் திசைகள் விடிவுபெறும். அந்த விடியலுக்காய் வீரக் குரல் கொடுத்த பெண்புலிகளின்



2ம் லெப். மாலதி

சாதனைகளில் கரும்புலி? தாக்கு தலில், கடற் கரும்புலித் தாக்குதலில் காற்றோடு காற்றாய் கரைந்த அந்தச் சகோதரிகளை நினைக்க நெஞ்சம் உருகும். பிறர்க்கிதை எடுத்துரைக்க வார் த்தைகள் தவம் கேட்கும். ஈழ விடுதலையின் அவசியத்துக்காய் தங்களைத் தற்கொடை செய்து கொண்ட மாவீரர்களைப் பெற்ற மண் மாதவம் செய்ததுதான். இவர்களைப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்த பெற்றோர்கள் பெருமைக்குரியவர்கள்தான். இத்தகைய மாவீரர்களைத் தக்கபடி பேணி தலைசிறந்த போராளிகளாக்க உருவாக்கிய தானைத் தலைவர் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் ஒப்பற்ற தலைமை தலை சிறந்ததுதான்.

இத்தகைய பெண் போராளிகளின் எழுச்சி தமிழீழ வரலாற்றில் புதிய திருப்பங்களுக்கு வழிவகுத்துக் கொடுத்தது. அவற்றுள் முக்கிய மானதுதான் இலக்கியப் பார்வை யில் ஏற்பட்ட மாறுபட்ட கோண மாகும். காவலுக்கு வந்த பேய்கள் கடிக்கும் நாளையில் ஒரு காதல் என்ன மாலை என்ன இந்த வேளையில் என்று போராட்ட உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுத்துத் தமது இளமைக்கால உணர்வுகளைப் புறம் தள்ளி புதிய புறம் படைக்கப் புறப்பட்ட இந்த இளைஞர்களும் யுவதிகளும் வெற்றி பெறும் நாள் விரைவில் வரும். இந்த விடியல் மண்ணுக்கான விடியலாய், மகளிருக்கான விடுதலையாய், தமிழீழ விடுதலை யாய் விரைவில் புலரும். எங்களது பூமி புத்தம் புதிய பூமியாய் மலரும். அந்த மலர்ச்சியில் ஈழத்தமிழ்ப் பெண்ணின் பெருமையும் ஓங்கி வளரும்.

பூ என்று பாடிய புலவனின்
உவமைகள்
பொய்யாகி போக
புதிய உண்மைகள்
உலகத்தின் முகத்தில் ஓங்கி
அறைந்தன.

– இலக்கியா –

# களம் பல கண்ட....

**விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் தளபதிகளுள் ஒருவரான செல்வி விதுசா அவர்களின் நேர்காணல்.**

### ஜெயசிக்குறு சமர் பற்றி....?

எமது படையணிகள் பாரிய ளவிலான வலிந்து தாக்குதல்களை சந்தித்தது யாழ்ப்பாணம் சூரியகதிர் சண்டையிலேயாகும். அந்தச் சண்டையின்போது எமது அணிகளின் ஒவ்வொரு காவலரண்களையும் ஒவ்வொரு பதுங்கு குழிகளையும் அமைப்பதற்கு நாமே நேரடியாக வழிகாட்ட வேண்டியிருந்தது. ஆனால் நடைபெறும் ஜெயசிக்குறு சமரில் இந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. சண்டை எந்தப் பக்கம் நடக்கின்றதோ, அந்தப் பக்கம் அதற்கேற்ற வகையில் பதுங்கு குழி, காப்பரண்கள் அமைக்க வேண்டிய இடத்தைத் தீர்மானிப்பதும் அவர்களேதான். புளியங்குளம் நகரை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தபோது, புதூருக்கு வேறு வழி மூலம் இராணுவம் வரமுனைவதாக எமக்கு அறிவிக்கப்பட்டபோது அவ்விடத்திற்கு எமது அணியொன்றை அனுப்பினோம். அன்று இரவோடு இரவாக அவர்கள் புதூருக்கு வந்து நிலைகளை அமைத்து முடிக்கவும் காலையில் சண்டையை ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது. அங்கு பொருத்தமான இடத்தைத் தேர்ந்து நிலைகளை அமைத்ததும் புதூருக்கு வந்த எயர் மொபைல் பிரிக்கேட் அணி சந்தியைக் கைப்பற்ற விடாமல் நிலைமைக்கு ஏற்ற வகையில் முடிவுகளை எடுத்தும் கள நிலைமைகளைத் தெளிவான முறையில் அறிவித்தவாறும் சண்டை செய்தனர்.

வழமையான கடுமையான பயிற்சி கொடுக்கப்படுவதன் மூலமே ஒரு இராணுவம் பலமாக வளர்க்கப்படும். ஆனால் எமது போராளிகள் களத்தில் தேவைகளுக்கு ஏற்றவகையில் குறைந்தளவு பயிற்சிகளுடன் பலமாக உறுதியாகச் செயற்படுகிறார்கள். இங்கே அவர்களை அவர்களின் மனஉறுதிதான் வளர்த்திருக்கிறது.

நீண்ட காலமாக காவலரண்களிலேயே எங்கள் போராளிகளின் வாழ்வு கழிகிறது. நீண்ட காலமாக அவர்கள் விடுமுறையில் செல்லவில்லை. ஆனால் அவர்களில் சோர்வில்லை. அவர்களுக்கு அவர்களின் பெற்றோரில் நேசம் இருக்கிறது. அவர்களைப் பார்க்க வேண்டும், அவர்களோடு பேச வேண்டும் என்றெல்லாம் விருப்பம் இருக்கிறது. ஆனால் இந்தச் சண்டையை வென்று விட்டுப் போகலாம் என்ற தீர்மானத்துடன் இருக்கிறார்கள். அவர்களின் மனநிலை உண்மையிலேயே வித்தியாசமானது. சில மாதங்களுக்கு முன்னர் நடந்த சம்பவத்தை குறிப்பிட்டுக் கூறலாம். ஒரு புதிய போராளி ஜெயசிக்குறு களத்தில் காவலரணில் நின்றார். இவர் ஒரு நாள் என்னிடம்,

"இந்தப் பெரிய ஆமிக்காரனோடை சண்டை பிடிக்க எனக்கு பயமாக இருக்குது" என்று சொன்னார்.

"சரி அப்படியானால் நீ பின்னுக்கு வா"

என்று அவரை களத்திற்கு வெளியே கூட்டி வந்து விட்டேன். சில நாட்களின்பின் இப்பொது தனக்குப் பயம் போய்விட்டதாகவும், தான் சண்டைக்குப் போகப் போவதாகவும் கேட்டார். முன்னணிக் காவலரணுக்கு அவரை அனுப்பிவிட்டேன். அதன் பின்னரான சண்டைகளில் அவர் திறமையாகச் செய்தார். இப்போது சண்டை என்பது அவருக்கு விளையாட்டுப் போல இலகுவான விடயம் என்றாகிவிட்டது.

அண்மையில் முன்னணிக் காவலரண்களில் நின்ற போராளிகளுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர் என்னை உற்சாகமாக வரவேற்றார். அவரது காவலரணில் முன்புறத்தைப் பார்வையிடும் துவாரத்திற்குச் சற்றுக் கீழாக மண்மூட்டைகளின் இடையே மூன்று தடிகள் செருகப்பட்டு ஒரு தட்டுப்போல வடிவமைக்கப்பட்டிருந்தது. இது ஏன் என்று அவரிடம் நான் கேட்க, ஒரு துள்ளுத்துள்ளி அந்தத் தடிகளின்மேல் ஏறியமர்ந்து மண்மூடைகளுடன் சாய்ந்து துவாரத்தின் வழியே முன்புறத்தை அவதானித்தவாறு, 'இதற்காகத்தான்' என்றார். இப்படித்தான் போராளிகள் கடினமான வாழ்க்கையை தமது தந்திரோபாயங்களினால் இலகுவாக்கிவிட்டு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

இந்தச் சண்டை எமது படையணிகளை எவ்வளவு தூரம் வளர்த்திருக்கிறது என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். முன்பெல்லாம் திட்டமிட்ட சண்டைகள் இலகுவாகவும் எதிரியின் வலிந்த தாக்குதல்களை எதிர்கொள்ளுவதில் கொஞ்சம் சிரமமும் ஏற்படும். வெல்லலாம் அல்லது வெல்ல முடியாமல் போகலாம். ஆனால் இப்போதோ எதிரியின் வலிந்த தாக்குதலை முறியடிப்பது என்பது எமக்கு மிக இலகுவான விடயமாக இருக்கிறது. புளியங்குளத்தில் டாங்கிகளுடன் முன்னேறிய படையினர், புதூரைக் கைப்பற்ற வந்த எயர் மொபைல் பிரிகேட், மன்னகுளத்தில் எமது நிலைகளைக் கைப்பற்ற முனைந்த சிறிலங்காவின் சிறப்புப் படையணிகள், ஒலுமடுவில் டாங்கிகளுடன் முன்னேற முனைந்த படையினர், அதே நாளில் மூன்றுமுறிப்புப் பகுதியை ஊடறுக்க முனைந்த கொமாண்டோ அணியினரின் வலிந்த தாக்குதல்கள் எல்லாம் மிக இலகுவாக எமது போராளிகளால் முறியடிக்கப்பட்டன. எதிரி எந்தப் பெரிய பலத்துடன் வந்தாலும் எந்த நாட்டிடம் பயிற்சி எடுத்து வந்தாலும் எத்தகைய அனுபவம் மிக்க தளபதிகளின் வழிநடத்தலில் வந்தாலும் அவர்களை முறியடிக்கும் மனோபலமும் தந்திரோபாயங்களும் இந்தச் சண்டையில் எம்மிடம் வளர்ந்திருக்கின்றன.

**எதிரி எந்தப் பெரிய பலத்துடன் வந்தாலும், எந்த நாட்டிடம் பயிற்சி எடுத்து வந்தாலும், எத்தகைய அனுபவமிக்க தளபதிகளின் வழிநடத்தலில் வந்தாலும், அவர்களை முறியடிக்கும் மனோபலமும், தந்திரோபாயங்களும் இந்தச் சண்டையில் எம்மிடம் வளர்ந்திருக்கின்றன.**

***– தளபதி விதுசா***

இந்த ஜெயசிக்குறு களமானது எதிர்காலத்தில் எமது தலைவரின் கனவுகள், அதாவது பெண் போராளிகளின் அணிகள் பெரியளவில் செயற்பட வேண்டும் என்ற சிந்தனை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளைத் தந்து கொண்டிருக்கின்றது. இதன் விளைவாகப் பின்வரும் காலங்களில் இராணுவ ரீதியான பாரிய வளர்ச்சியை நிச்சயமாக ஏற்படுத்தும்.

ஒரு வருடத்திற்கும் மேலாக நடக்கும் இந்தச் சண்டை எமது படையணிகளைப் பொறுத்தவரையில் பல இராணுவப் பாடங்களை, எந்தத் தாக்குதல்களையும் சமாளிக்கும் ஆற்றலை, மனஉறுதியைத் தந்திருக்கின்றது. வேறு நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாறுகளை வாசித்து, இப்படியும் நடக்குமா என்று நாம் ஆச்சரியப்பட்ட சம்பவங்கள், அதற்கும் மேலான சம்பவங்களை நாம் இந்த சண்டையில் சந்தித்து விட்டோம். எமக்கு இவையெல்லாம் இயல்பாகிவிட்டன.

### இந்தக் களத்தில் உங்களால் மறக்க முடியாத அனுபவம் எதையாவது சொல்ல இயலுமா?


புதூர் பகுதியிலே சண்டை நடந்தபோது இது நடந்தது. இராணுவத்திற்கும் எங்களுக்கும் இடையே கடுமையான சண்டையாக இல்லாவிட்டாலும் ஒரு குறிப்பிட்ட நேரம் வரையில் அந்தச் சண்டை நடந்தது. அதில் அன்று இராணுவம் பின்வாங்கிவிட்டது. சண்டை நடந்த இடத்தை நான் நேரில் பார்த்தபோது ஒரு காப்பகழிக்குள் துப்பாக்கியுடன் ஒரு பெண் போராளி பாதம் வரை இரத்தத்தில் புதைய நின்றிருந்தார். அவர் அப்போதுதான் பயிற்சி முடித்திருந்து களத்திற்கு வந்த புதிய போராளி. அவர் குண்டுடன்தான் களத்துக்குப் போயிருந்தார். அதுதான் அந்தப் போராளிக்கு முதல் சண்டை. தன்னுடன் காப்பகழியில் கூடவே நின்று சண்டை பிடித்த போராளி பலத்த காயமடைந்து விழ, அவரது துப்பாக்கியை எடுத்து இவர் சண்டை பிடித்திருந்தார். முதல் சண்டை. அருகில் நின்றவர் உடனேயே விழுகிறார். இரத்தம் ஓடுகிறது. முன்னாலே இராணுவம். பயமோ பதட்டமோ இல்லாமல், ஓடவேண்டும் என்ற சிந்தனையே இல்லாமல் அந்தப் புதிய போராளி சண்டை செய்ததை என்னால் மறக்கவே முடியாது. இராணுவம் துரத்தப்பட்டது என்பதை விட அந்தப் புதிய போராளியின் மனஉறுதிதான் பெரிய விடயம்.


### பெண்கள் படையணியின் குறிப்பிடத்தக்க சண்டை ஒன்றைப் பற்றிச் சற்று விளக்கமாகச் சொல்லுங்கள்?

புதூரில் எயார் மொபைல் பிரிகேடுடன் நடந்த சண்டையைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். புளியங்குளத்தை நாம் பாதுகாத்துக் கொண்டிருந்தபோது அந்தச் சண்டை நடந்தது. அப்போது அநேகமான அணிகள் புளியங்குளத்தைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. இராணுவம் திடீரென வேறு பாதையால் புதூருக்கு வரக்கூடிய சாத்தியக்கூறு இருந்ததால் புதூருக்கு அன்றிரவு எமது அணியொன்று புறப்பட்டது. அன்றிரவு போய்

# தீயினில் எரியாத தீபங்கள் !

லெப்.கேணல்.குமரப்பா, லெப்.கேணல்.புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 11ம் ஆண்டு நினைவாக......





## களம் பல.....

இரவோடு இரவாக காவல் நிலைகளை, காப்பகழிகளை அமைத்துக் கொண்டிருந்தன. மறுநாள் விடிந்து வெளிச்சம் வந்தபின்னர்தான் சில காப்ப கழிகள் பொருத்தமான இடங் களில் அமைக்கப்படாததைக் கவனிக்க முடிந்தது. அவற்றை யெல்லாம் திருத்தியமைக்க முயன்றபோது' சண்டை ஆரம் பித்து விட்டது. எதிர்பாராத சண்டை அது. முன்னேறி வந்து கொண்டிருந்த இராணுவம் எம்மைச் சந்தித்தவுடன் சண்டை தொடங்கியது. நாம் நிலைகளை அமைத்து முடிக்கவில்லை. காப்பகழிகள் வெட்டி முடிய வில்லை. பின்னணி விநி யோகங்கள் ஒழுங்கமைக்கப்பட வில்லை. எல்லோரும் வேலை செய்து கொண்டிருந்ததால் அணித் தலைவிகள் வெவ்வேறு இடங்களில் நின்றார்கள். புளியங் குளத்திலிருந்து புதூர் நீண்ட தூரம் என்பதால் நாங்கள் உடனடியாக அந்த இடத்தில் சண்டையை எதிர்பார்க்கவு மில்லை. ஆனால் சண்டை தொடங்கிவிட்டது. இராணு வத்தின் தாக்குதல் உக்கிரமாக இருந்தது. வேறு வேறு இடங்களில் நின்ற எல்லோரும் அவரவர் இடங்களுக்கு வந்து அணித் தலைவிகள் தமக்குள் தொடர்புகளை ஏற்படுத்தி, அணியை ஒழுங்குபடுத்தி மருத்துவ அணி, மோட்டார் அணிகளை உரிய இடங்களுக்குக் கூப்பிட்டு சரியான காப்பற்ற இடத்தில் காப்பகழிகூட சரியாக அமைக்கப்படாத நிலையில் அந்தச் சண்டைக்குச் சரியாக முகம் கொடுப்பதற்குள் எல்லோ ரும் தவித்துப் போய்விட்டோம். அது ஒரு வெட்டைப் பிரதேசம் என்பதால் எங்கிருந்து பார் த்தாலும் எங்களின் நகர்வு தெரியும் நிலையிலேயே சண்டை நடந்து கொண்டிருந்தது. புதூர் எதிரியிடம் பிடிபட்டால் புளியங் குளத்தில் நிற்கும் அணிகளு க்குரிய விநியோகம் தடைப்பட்டு விடும் என்பதால் நாம் புதூரை எதிரியிடம் விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம். சண்டை அணிக்கு உதவியாக ஒரு பக்கத்தில் எமது பி.கே.எல்.எம்.ஜி இயங்கிக் கொண்டிருக்க, சரியான சமயத்தில் ஆண் போராளிகளின் 50 கலிபர் உதவிக்கு வந்தது. காயப்பட்டவர்களைக் கூட அகற்ற முடியாத வெட்டை வெளியில் நடந்த சண்டையை எமது மனஉறுதியால்தான் நாம் வென்றோம். அங்கு வந்தது சிறிலங்காவின் எயர்மொபைல் பிரிகேட் என்பதை சண்டை முடிந்தபின்னரே அறிந்து கொண்டோம். அங்கு எதிரியின் பலத்தைவிட, இராணுவத் தந்திரோபாயங்களையும் விட போராளிகளின் மனஉறுதியே மேலோங்கி இருந்தது.

**விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் தளபதிகளுள் ஒருவரான செல்வி சப்தகி அவர்கள்–**

வன்னிச் சமருக்காக நாங்கள் மட்டக்களப்பிலிருந்து வந்து கொண்டிருந்த பாதையில் ஏற்பட்ட மோதலில் 2ம் லெப். முகிலா என்ற 60எம்.எம். இயக்குனரை இழந்தோம். வன்னிச் சமருக்கு நாம் கொடுத்த முதல் விலை முகிலா. சேறு, சகதி, காடு எல்லாவற்றையும் கடந்து நீண்ட தூரம் நடந்து வந்தோம். இங்கு வந்து நெடுங்கேணியில் முதலில் ஜெயசிக்குறுவை எதிர்கொண் டோம்.

> சேறு,சகதி,காடு எல்லாவற்றையும் கடந்து நீண்ட தூரம் நடந்து வந்தோம். இங்கு வந்து நெடுங்கேணியில் முதலில் ஜெயசுக்குறுவை எதிர்கொண்டோம்.
>
> – தளபதி சப்தகி

முற்றிலும் புதிய நிலப்பகுதியில் புதிய போராளிகளைக் கொண்ட எமது படையணி ஜெயசிக்குறுக் களத்தில் பரவலாக நிற்கிறது. 1997.11.02 இல் கிளிநொச்சியில் முன்னேற முயன்ற சிங்களப் படையினரை எதிர்த்துத் தாக்கி 2 எல்.எம்.ஜி எடுத்தார்கள். கிளிநொச்சியில் நின்ற எமது படையணிக்கு அதுதான் முதல் சண்டை. அந்தச் சண்டையில் இரண்டு போராளிகளை இழந்தோம். கரப்புக்குத்தி–விஞ்ஞானகுளம் சண்டையில் கூட எறிகணைகள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியத்தை முதலில் பிடித்தது எமது படையணிதான். அந்தச் சண்டையில் நாம் எமக்குத் தரப்பட்ட வேலையை முடித்து விட்டு காவலில் நின்ற போது, இன்னொரு முகாமைத் தாக்கு மாறு கட்டளை கிடைத்தது. உடனேயே எமது அணி அந்தச் சிறு முகாமைத் தாக்கியது. அங்கிருந்த வாகனமும் தொலைத் தொடர்புக் கருவி களும் எம்மால் கைப்பற்ற ப்பட்டன. அந்த முகாமைக் கைப்பற்றிய செய்தியை அங்கே எடுத்த செற்றிலேயே அம்மா னுக்கு அறிவித்தோம்.

**விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் தள பதிகளுள் ஒரவரான செல்வி துர்க்கா அவர்கள்–**

எதிரியின் பலத்தை அறியும் வரையில்தான் பதட்டம் இருக்கும். இது இவ்வளவுதான் என்பது தெரிந்தபின் ஒரு பிரச்சினையுமில்லை. படை யினரின் டாங்கிகளுடன் மோதி அவற்றை அழித்தும் சேதப் படுத்தியும் விரட்டிய ஓலுமடுச் சண்டையின் பின் எமது படையணியின் போராளி ஒருத்தி சொன்னாள், "இனி எது வந்தாலும் எங்களுக்குப் பிரச்சி னையில்லை" என்று.

அநேகமாக நேரடிச் சண்டை இல்லாத நேரங்களில் படையினர் எரி குண்டுகளை எம் பகுதிக்கு ஏவுவார்கள். அது வெடித்தவுடன் எல்லாம் பற்றி எரியும். எமது நிலைகளை உருமறைப்பதற்காக நாம் செய்திருந்த அமைப்புகள், வேலிகள் எல்லாம் எரிந்துவிடும். தகரங்கள் எல்லாம் தூக்கி எறிய[illegible] நெளிந்து கிடக்கும். மெல்லிய [illegible]ரங்கள் பிய்ந்து துண்டு [illegible] துண்டாகி விடும். எரிகுண்டு விழுந்து எரிந்த இடத்தை முதலில் பார்த்தபோது எனக்குத் திகைப்பாகி விட்டது. எப்படி இதற்குள் எல்லோரும் நின்று பிடிப்பது என்று யோசித்தேன். ஆனால் எமது படையணிகள் இதைத் தைரிய மாக எதிர்கொண்டன. பகலில் பார்த்துப் பார்த்து எதிரி எரிகுண்டுகளை ஏவி எரித்து வைக்கும் அமைப்புகளை இருள் சூழ்ந்தவுடன் போராளிகள் சீரமைத்துவிடுவார்கள். திக் கொன்றாய் பறந்து நெளிந்து கிடக்கும் தகரங்களை நெளி வெடுத்து பழையபடி செருகி விடுவார்கள். காலையில் பார்த்தால் அது முதல்நாள் எரிந்த இடம் என்றே தெரியாது. மறுநாளும் அவன் எரிப்பான். போராளிகள் சீரமைப்பார்கள். காப்பகழிக்கு வெளியே ஒரு பொருள்கூட வைக்க முடியாது. ஈரம் உலர்வதற்காக விரித்திரு க்கும் உடைகள், தேநீர் தயாரிக்கும் பாத்திரங்கள் எல்லாம் எறிகணைகள் பட்டு தூள்தூளாகிவிடும். ஆரம்பத்தில் எல்லாமே திகைப்பாக இருந் தாலும் சில நாட்களிலேயே எல்லாம் எமக்கு இயல்பாகி விட்டது. ❋

## தமிழீழ மண்மீட்புப் போரில் பாரிய தாக்குதல் என வர்ணிப்பு

# 'ஓயாத அலைகள் -2'

விடுதலைப் புலிகளின் தமிழீழ மீட்புப் போராட்ட வரலாற்றில் மிகப் பாரிய அளவிலும் அதிக சேதத்தை சிறிலங்காப் படையினருக்கு ஏற்படுத்தியுள்ளதும் தமிழீழ மீட்புப் போர் முனையில் பெரும் திருப்புமுனையாக அமைய உள்ளதுமான பாரிய அழித்தொழிப்பு யுத்தம் ஒன்றை கிளிநொச்சி – பரந்தன் பகுதிகளில் நிலைகொண்டிருந்த சிங்களப் படைகள் மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளனர். 1500க்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்புப் படைகளை அழித்தொழித்து 1000க்கும் அதிகமான படையினரின் உடல்களைக் கைப்பற்றி பெருந்தொகையான நவீன ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றி கிளிநொச்சிப் பிரதேசத்தை முழுமையாக ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித்து பரந்தனுக்கு அப்பால் ஆனையிறவு நோக்கி ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டி அடித்து போரியல் வரலாற்றில் மேலும் ஒரு வீரகாவியம் படைத்த இப்பெரும் அழித்தொழிப்பு யுத்தம் குறித்து இங்கு தருகிறோம்.

### திலீபன் நினைவு

செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை. காலை முதலே தமிழீழ தேசம் தேசவிடுதலைக்காய் அதி உயர் அர்ப்பணிப்பைச் செய்த தியாக தீபம் திலீபனின் 11ஆவது ஆண்டை நினைவு கூரும் முகமாக எழுச்சிக்கோலம் கொண்டிருந்தது. சுதந்திரத் தமிழீழத்தின் பகுதிகள் எல்லாம் திலீபனின் நினைவால் மிளிர்ந்தவண்ணம் இருந்தன. ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட தமிழீழப் பகுதிகளில் கூட மக்கள் நினைவெல்லாம் தமக்காக தன்னை வருத்தி அழித்துக்கொண்ட அம்மாவீரன் நினைவாகவே விடிந்தது. அங்கும் மக்கள் தங்கள் சக்திக்கு உட்பட்ட ரீதியில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். திலீபனின் நினைவில் தமிழீழம் அமிழ்ந்துள்ளது எனினும் அவ் நினைவு தம்மீதும் திரும்பலாம் என்ற அச்ச உணர்வில் சிங்கள ஆக்கிரமிப்புப் படையினர் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தனர். அடிமைச் சின்னமாக விளங்கிய யாழ் கோட்டை நோக்கி, அந்த அடிமைச் சின்னம் வென்றாகப்பட வேண்டும் என முழங்கியவன் திலீபன். அவன் நினைவாக 1990ஆம் ஆண்டில் அவனது 3ஆவது நினைவு நாளன்று அக்கோட்டையைச் சிங்களப் படைகளிடமிருந்து கைப்பற்றி அவ் அடிமைச் சின்னத்தை விடுதலைப் புலிகள் அழித்தொழித்தனர். அந்நினைவு ஆக்கிரமிப்புப் படைகளின் மனதில் இன்றும் பசுமையாகவே உள்ளது. எனினும், செப்டெம்பர் 26 இரவு இவ்வாறு விடியும் என்பதை அவர்கள் கனவிலும் கற்பனை செய்திரார்கள்.


### பாரிய படைத்தளம்

நடு இரவு கடந்த நேரம். இயக்கச்சியிலிருந்து ஆனையிறவு பரந்தன் கடந்து கரடிப்போக்குச் சந்திவரை நீண்ட மலைப்பாம்பாக விரிந்து கிடந்தது பாரிய ஆக்கிரமிப்புப் படைத்தளம். பரந்தனிலிருந்து கரடிப்போக்கு வரையிலான பகுதிகளில் 54ஆவது படைப்பிரிவின் 1வது, 2வது, 3வது படையணிகள் நிலைகொண்டிருந்தன. பரந்தனில் 96ஆம் ஆண்டு பூநகரியிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட 10ஆவது படைப்பிரிவு நிலைகொண்டிருந்தது. இவற்றில் விசேட கொமாண்டோக்கள் கவசப்படைப் பிரிவு உட்பட ஆக்கிரமிப்புப் படைப் பிரிவின் முக்கிய படைப்பிரிவினர் எத்தகைய தாக்குதலையும் எதிர்கொள்ளும் வகையில் தயாராக இருந்தனர்.

### 15 கி.மீற்றர் பாதுகாப்பு வேலி

ஆனையிறவுக்குத் தெற்கே இருந்த இப்படைகளின் முன்னணிக்காவல் அரண்கள் 15 கி. மீற்றர் தூரத்திற்குத் தொடராக கிழக்கே சுண்டிக்குளம் முதற்கொண்டு மேற்கே குஞ்சுப் பரந்தன் கழிந்து வியாபித்திருந்தன. இவற்றினுள்ளே இரண்டாவது நிலைக் காவல் அரண்கள், மூன்றாவது நிலைக் காவல் அரண்கள், உள்ளே கட்டளைத் தலைமையகம், பாரிய முகாம்கள், மினி முகாம்கள் என 4000க்கும் மேற்பட்ட படைகளை உள்ளடக்கிய பாரிய தளம் அமைந்திருந்தது.

### தகவல் திரட்டிய வேவுப் புலிகள்




கடந்த சில மாதங்களாக இவ் உயர் பாதுகாப்பு வலயத்தை ஊடுருவி துல்லியமான தகவல்களை விடுதலைப் புலிகளின் வேவுப் புலிகள் சேகரித்தமை விடுதலைப் புலிகளின் உலகம் அதிசயிக்கும் வீரவரலாறு. இத்தளத்திற்கு ஆதரவாக உள்ள பின்தள பாதுகாப்பு ஏற்பாடுகளும் அவர்களின் கண்களில் தப்பவில்லை. பளைக்கும் ஆனையிறவுக்கும் இடையே உள்ள இயக்கச்சியில் அமைக்கப்பட்டிருந்த 122மி.மீ, 130 மி.மீ நீண்ட தூர தாக்குதல் ஆட்லறித் தளம் அதி உயர் பாதுகாப்பும் நன்கு அரண் அமைக்கப்பட்டதுமான ஆனையிறவுத் தளத்தில் அமைக்கப்பட்டிருந்த மேலும் ஒரு ஆட்லறி, மோட்டார் தளம் – ஆனையிறவில் அமைந்திருந்த பாரிய ஆயுத விநியோகக் கிடங்கு நீண்டு உயர்ந்து வானை எட்டி நின்ற தகவல் தொடர்புக் கோபுரம் என்பன பரந்தன் கிளிநொச்சிப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த படைகள் மீது மேற்கொள்ளப்படும் எத்தகைய தாக்குதல்களையும் முறியடிக்கும் முயற்சிக்கு உறுதுணையாக அமைக்கப்பட்டிருந்தன.

### 'சத்ஜெய'வும் கிளிநொச்சி நகர் விடுவிப்பும்

இந்நிலையில் 1996 யூலையில் வரலாற்று நிகழ்வான ஓயாத அலைகள் அழித்தொழிப்பு யுத்தம் மூலம் முல்லைத்தீவு மாவட்டம் முழுமையாக விடுவிக்கப்பட்டபோது அவ்வரலாற்றுத் தோல்வியை மூடிமறைக்கவும் விடுதலைப் புலிகளின் கவனத்தை திசை திருப்பவும் என 1996 யூலை 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 'சத்ஜெய–1', 'சத்ஜெய–2', 'சத்ஜெய–3' என 70 நாட்கள் தொடர்ந்து பத்திற்கு மேற்பட்ட தாங்கிகளை இழந்து, 600 படையினரைப் பலிகொடுத்து தொடர்ந்த சமரில் கிளிநொச்சி பஸ் டிப்போ சந்திவரை ஆக்கிரமிப்புப் படைகள் வியாபித்தி ருந்தமை உங்களுக்கு நினைவிருக்கலாம். கடந்த பெப்ரவரி முதலாம் நாள் சிங்கள தேசம் 50ஆண்டு சுதந்திர நிகழ்வைக் கொண்டாட முயன்றிருந்த வேளை தமிழீழ சுதந்திரம் வென்றாகப்படும் என்பதை நினைவுறுத்த சிங்களப் படைகள் மீது பாரிய அதிரடித்தாக்குதலை மேற்கொண்டு பஸ் டிப்போ சந்தியிலிருந்து கரடிப்போக்கு சந்திவரை ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டினர் விடுதலைப் புலிகள்.

### தேசியத் தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் தாக்குதல் திட்டம்

அன்று முதல் மேலும் ஒரு வீர காவியம் படைக்க செயற்பட்ட வேவுப்புலிகளின் பணி முடிவுற்ற நிலையில் அவர்கள் திரட்டிய துல்லியமான தகவல்கள் ஒருங்கிணை க்கப்பெற்று பாரிய தாக்குதல் வடிவம் தயாரானது. தமிழீழ தேசிய தலைவர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் படையணிகளின் தாக்குதல் பயிற்சியும் சிறப்புற நடந்தேறின. இந்நிலையில் தாக்குதல் நடாத்த திட்டமிடப்பட்ட செப்டெம்பர் 26ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகள் தாக்குதல் தளபதிகளின் தலைமையில் எதிரிப் படைகளுக்கு எத்தகைய அசைவுகளையும் காட்டாது நிலைகொண்டன. தாக்குதல் தொடுக்கப்படும்போது பின் புலமாகத் திகழக்கூடிய இயக்கச்சி ஆட்லறித்தளம் ஆனையிறவு ஆட்லறித் தளம் ஆயுத விநியோகக் கிடங்கு தகவற் கோபுரம் ஆகியவற்றை தகர்ப்பதற்கென விசேட அணிகள் அதி உயர் பாதுகாப்புடன் கூடிய அப்பகுதிகளுக்குள் ஊடுருவின. முன்னேறிய அணிகள் தமது பணியைச் செய்து முடித்தன. ஆட்லறித் தளங்களில் இருந்த ஆட்லறிகள் அழிக்கப்பட்டன. பாரிய ஆயுத விநியோகக் கிடங்கு வெடித்துச் சிதறத்தொடங்கியதும் அந்த அர்த்த நடுநிசியில் ஆனையிறவு அதிர்ந்தது.

### ஆக்கிரமிப்புப் படைத்தளம் அதிர்ந்தது.

அதிர்வின் அதிர்ச்சியில் ஆக்கிரமிப்புத் தளம்

====>>>>

திணறியபோது பரந்தனை நோக்கி விடுதலைப் புலிகளின் அதிரடிப் படைப்பிரிவுகள் புயல்வேகப் பாய்ச்சலை மேற்கொண்டன. ஆனையிறவு, பரந்தன் வடக்கு ஆக்கிரமிப்புத் தளங்கள் மீது விடுதலைப் புலிகளின் கேணல் கிட்டு– பீரங்கிப் படைப்பிரிவு சரமாரியான ஆட்லறி, மோட்டார் தாக்குதலை மேற்கொண்டது. சண்டை விமானங்கள் உதவிக்கு விரைந்தால், அவற்றை எதிர்கொள்ளவென இம்ரான் பாண்டியன் விமான எதிர்ப்பு படையணி தயார் நிலையில் நின்றது. கடல்வழியாக யாழ் குடாநாட்டில் இருந்தோ வெற்றிலைக்கேணியில் இருந்தோ படைகள் பரந்தனுக்குக் கிழக்கேயோ மேற்கேயோ இறக்கப்படாமல் கடல் நீரேரியில் கடற்புலிகள் ரோந்தில் ஈடுபட்டன. முன்னணிக்காவல் அரண் மின்னல் வேகத்தில் தாக்கப்பட எதிரியின் 2ஆம் 3ஆம் பாதுகாப்பு நிலைகள் நிலைகுலைந்தன. பரந்தனில் நிலைகொண்டிருந்த படைகள் பாரிய இழப்புக்களுடன் ஆனையிறவு நோக்கி ஓடித்தப்பின.

## தனிமைப்படுத்தப்பட்ட படைகள்

பரந்தன் நோக்கிய மின்னல் வேகத் தாக்குதலில் காவல் அரண்களை உடைத்து ஊடறுத்து உட்புகுந்த விடுதலைப் புலிகள் கிளிநொச்சிக்குத் தெற்கே அமைந்திருந்த பாரிய படைமுகாம் படைகளைத் தனிமைப்படுத்தினர். ஆனையிறவு முகாமில் இருந்து வரும் எத்தகைய உதவிப்படைகளின் முயற்சியையும் முறியடிக்கும் விதத்தில் லெப். கேணல். விக்ரர் தாங்கி எதிர்ப்புப் படையணியுடன் விடுதலைப் புலிகளின் ஓர் படையணி பரந்தனில் நிலையெடுத்தது. இந்நிலையில் கரடிப் போக்கை மையமாகக் கொண்டு அமைந்திருந்த பாரிய ஆக்கிரமிப்பு இராணுவத்தளத்தின் மீது மேற்கொண்ட அழித்தொழிப்பு யுத்தத்தை ஒத்த பாரிய தாக்குதலை சுற்றிவளைப்பு அழித்தொழிப்பு யுத்தத்தை விடுதலைப் புலிகள் தொடுத்தனர். மகளிர் படைப்பிரிவு முன்னிலை பெற விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பு யுத்தம் தீவிரமடைந்தது.

## வான்படை உதவி துண்டிப்பு

ஞாயிறு விடிந்தும் தாக்குதல் தொடர்ந்தது. குறுகிய தூரத்தில் இருந்து விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்ததால் விமானப்படை உதவி இரவு படையினருக்கு கிட்டவில்லை. விடிந்ததும் படை விமானங்கள் வானில் தோன்றினாலும் முற்றுகையிடப்பட்டிருந்த படைகளுக்கு உதவக் கூடிய நிலையில அவையிருக்கவில்லை. அதியுயர் உயரத்தில் இருந்து தாக்குதல் மேற்கொண்டால் அவை தமது படையினரையே பலி கொள்ளக்கூடிய நிலை. குறுகிய தூரத்தில் வந்து தாக்குதல் நடாத்தினால் தயாராக இருக்கும் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியின் தாக்குதலுக்கு இலக்காகும் நிலை. இந் நிலையில் ஆனையிறவுத் தளத்தில் குவிந்து கொண்டிருக்கும் காயப்பட்டவர்களை வெளியே ற்றும் முயற்சியில் ஈடுபட உலங்குவானூர்திகள் சில முயன்றன. விமான எதிர்ப்புப் படையணியின் கவனம் அவற்றின் மீது திரும்பியது ஓர் உலங்கு வானூர்தி தாக்குதலுக்கு இலக்கானதை அடுத்து அனைத்தும் பின்வாங்கி வானில் இருந்து மறைந்தன.

## மீட்பு முயற்சி முறியடிப்பு

வான்வெளி உதவி தடைப்பட்டதும் ஆனையிறவில் இருந்து முன்னேறி தாக்குதல் நடத்தி துருப்புக்களை மீட்கும் ஒரு பாரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. குடாநாட்டிலிருந்து ஆனையிறவுக்கு நகர்த்தப்பட்டு அங்கு குவிக்கப்பட்ட பெருந்தொகைப் படைகள் சமீபத்தில் வாங்கப்பட்ட 3 மிக நவீன பிரதான யுத்த தாங்கிகள் சகிதம் பரந்தனை நோக்கி முன்னேறின. சரமாரியான எறிகணை தாக்குதலுடன் முன்னேறிய இப்படைகளை எதிர்கொண்டனர் விடுதலைப் புலிகள். குறுகிய காலத்தில் நன்கு அரணமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களை அமைத்துக் காத்திருந்த தாங்கி எதிர்ப்புப் படையணி முன்னேறிவரும் தாங்கிகள் அருகில் வரும்வரை காத்திருந்து திடீர்த் தாக்குதலைத் தொடுத்தன. ஜெயசிக்குறுப் படையணிகளுக்கு சமீப காலமாக சிம்மசொப்பனமாகத் திகழும் லெப். கேணல். விக்டர் தாங்கி எதிர்ப்புப் படையணியின் மின்னல் வேகத் தாக்குதலில் முன்னர் வந்த இரு பிரதான நவீன யுத்த தாங்கிகளும் வெடித்துச் சிதறின. இதனை சற்றும் எதிர் பாராத மீட்புப் படையணியினர் நிலைகுலைந்து சிதறி இழப்புக்களுடன் பின்வாங்கத் தொடங்கினர். இதில் ஒரு தாங்கி விடுதலைப் புலிகளின் கைகளில் சிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனைத் தவிர்க்கும் முகமாக அத்தாங்கியில் இருந்தவர்களே அதனை வெடிக்க வைத்துவிட்டுத் தப்பி ஓடினர். சிதறிப் பின்வாங்கிய படைகள் மீது விடுதலைப் புலிகள் மோட்டார், இலகு இயந்திரத் துப்பாக்கி கொண்டு தாக்குதல் நடத்தினர். இதில் பலத்த இழப்புக்களுடன் மீட்புப் படையினர் மீட்க வேண்டிய படையாக மாறி ஆனையிறவு திரும்பினர்.

## அழித்தொழிப்பு யுத்தம்

இந்நிலையில் முதல்நாள் சண்டை பலநூறு படையினரைக் கொன்றும் காயப்படுத்தியும் தொடர்ந்தது. ஞாயிறு இரவு முழுவதும் முற்றுகையிடப்பட்ட ஆக்கிர மிப்புப் படைகள் மீதான அழித்தொழிப்பு யுத்தத்தை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக மேற் கொண்டனர். சுற்றி வளை ப்பில் சிக்குண்டு உதவி மறுக்கப்பட்ட ஆக்கிரமிப்புப் படைகள் நிலைகுலைந்து சிதறி நாற்புறமும் ஓட எத்தனித்தனர். சுற்றி இருந்த விடுதலைப் புலிகளின் தீவிர தாக்குதலில் பலிக் கடாக்களாகி குஞ்சுப் பரந்தன், பெரிய பரந்தன், உருத்திரபுரம், எட்டாம் வாய்க்கால், 10ஆம் வாய் க்கால், ஜெயந்தி நகர், குருகுலம் என எங்கும் ஆக்கிரமிப்புப் படைகளின் சடலங்களால் நிறைந்தன. திங்கள் விடிந்ததும் அழித்தொழிப்பு யுத்தம் தொடர்ந்தது. ஆனையிறவுப் படைகள் மீண்டும் ஒருமுறை மீட்பு முயற்சியில் ஈடுபடாதவண்ணம் ஆனையிறவுத் தளம் மீது விடுதலைப் புலிகளின் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டது.

## பாரிய படைத்தளம் கைப்பற்றப்பட்டது


படையினரை மீட்கும் முயற்சிகள் தடைப்பட்ட நிலையில் சந்திரிகா படைகள் விசித்திரமான தாக்குதலில் இறங்கின. சண்டைக்களம் நோக்கி குறும் தூர எறகிணை தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கின. தமது தப்பிய படைகள் கூட பாதிப்படையா வண்ணம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தப்பியுள்ள படையினர் ஒன்றுசேர்ந்து தாக்குதல் நடத்துவதற்கு எந்தவிதத்திலும் உதவி செய்யவில்லை. திங்கள் மாலை தாண்டிய வேளையில் கட்டளைத் தலைமையகம் நடுத்தரமான இராணுவ முகாம்கள் 3 பல மினி முகாம்கள் என பரந்திருந்த அவ் ஆக்கிரமிப்புத் தளம் விடுதலைப் புலிகளால் முழுமையாகக் கைப்பற்றப்பட்டது. சிறு குழுக்களாகத் தப்பி பதுங்கியிருந்த படைகளை தேடி அழிக்கும் நடவடிக்கை இரவு முழுவதும் தொடர்ந்தது.

## விடுதலைப் புலிகளுடன் களத்தில் இணைந்த மக்கள்

3ஆவது நாளான செப்டெம்பர் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விடிந்தபோது 15 கி. மீற்றர் நீளமான ஆக்கிரமிப்புப் பாதுகாப்பு வலையம் தகர்ந்து கிடந்தது. கிளிநொச்சிப் பகுதி முழுவதும் விடுவிக்கப்பட்ட பிரதேசமாக விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஓயாத அலைகள் அழித்தொழிப்பு யுத்தம் மூலம் முல்லையில் வீரகாவியம் படைத்த தமிழீழ இராணுவமான விடுதலைப் புலிகள் கிளிநொச்சி மீட்பு அழித்தொழிப்பு யுத்தத்திற்கு ஓயாத அலைகள்–2 எனப் பெயரிட்டனர். மீட்கப்பட்ட பகுதிகளில் ஆக்கிரமிப்புப் படையினரின் சடலங்களை அப்புறப்படுத்துதல், எங்கும் பரவிக்கிடக்கும் பெருந்தொகையான கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைச் சேகரித்து அகற்றுதல் என பல்வேறு பணிகளிலும் மக்கள் புலிகளுடன் தோளோடு தோள் நின்றனர். காயம் அடைந்தவர்களுக்கு இரத்த தானம் வழங்குதல், களத்திலுள்ள நம் வீரர்களுக்கு உணவு வழங்குதல், இளநீர் வழங்குதல் என மக்கள் நம் வீரர்களின் வீரவரலாற்றில் தம் பங்களிப்பை உள மகிழ்வுடன் உவகையுடன் ஆற்றினர். இந்த மண் எங்களின் சொந்த மண் இதை மிதிப்பவனை அழித்தே நொருக்குவோம் என்ற உணர்வு அவர்களின் மனங்களில் உறுதியாகப் பதிந்திருந்தது.

## 1100க்கும் மேற்பட்ட சடலங்கள்

திங்கள் முதல் பரந்தனில் இருந்து கரடிப்போக்குவரை 5 கி.மீற்றர் அகலத்தில் 20 சதுரக் கி.மீற்றர் பரப்பளவில் காணப்பட்ட ஆக்கிரமிப்புப் படையினரின் சடலங்களை அகற்றும் பணி மக்களின் பூரண பங்களிப்புடன் நடந்தது. செவ்வாய் வரை சேகரிக்கப்பட்ட உடல்களில் நல்ல நிலையில் 800 வரையானவை காணப்பட்டன.



## காயமடைந்த சிறிலங்கா படையினர்

புலிகளின் தாக்குதலின் விளைவாகக் காயமடைந்த சிங்கள இராணுவத்தினரால் அநுராதபுரம் வைத்தியசாலைகள் நிரம்பி வழிந்ததைத் தொடர்ந்து கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு காயமடைந்தவர்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். ஆனையிறவுப் பகுதியில் காயமடைந்த இராணுவத்தினரை அப்புறப்படுத்த வென யாழ் குடா நாட்டிலுள்ள பேருந்துகள், லொறிகள், மக்கள் வாகனங்கள் என்பன அபகரிக்கப்பட்டு ஆனையிறவு நோக்கி அணி அணியாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறும் வீதியில் மக்கள் நடமாட்டம் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் செய்திகள் வெளியே தெரியாதவாறு திங்கள் முதல் யாழ் பகுதிகளுக்கான தொலை தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டிருந்தன. அதுவரை இவ்வளவு பெருந்தொகையான இராணுவத்தினர் காய மடைந்த நிலைமை யாழ் குடாநாட்டில் இதுவரை ஏற்பட்டிருந்ததில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## 240 விடுதலைப் புலிகள் வீரச்சாவு

தமிழீழ மண்மீட்புப் போரில் பாரிய வெற்றிகரமான இத்தாக்குதலில் 240 விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர். மண்ணின் மைந்தர்களான இம்மாவீரர் களுக்கு பொதுமக்கள் பெருமளவில் திரண்டு நின்று அஞ்சலி செலுத்தினர். ❋

# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 15



மார்ஷல் சுய்க்கோவ்



உடைந்துபோன டாங்கிகள் பழுது பார்க்கப்பட்டு, மீண்டும் திரும்பி வருவதைக் கண்காணித்த எனது கவச டாங்கிப் பிரிவு உதவியாளர் வாயின்ரூப் பின்வருமாறு சொன்னார்:

''214 என்ற எண் பொறிக்கப்பட்ட டாங்கி கிராஸ்னி அக்தியாபர் குடியிருப்பிலிருந்து தொழிற்சாலைக்கு இழுத்து வரப்பட்டது. டாங்கி எதிர்ப்பு குண்டு அதன் பக்க வாட்டு சுவரைத் துளைத்திருந்தது. என்ஜின் பழுதடைந்திருந்தது. மக்காரவின் தலைமையிலான பிரிகேடு பழுதுபார்க்கும் பணியில் இறங்கியது. பின் கவச மூடியைத் திறப்பதற்குள்ளாகவே பாசிச விமானங்கள் பறந்து.வந்து குண்டு மழை பொழிந்தன.... எல்லோரும் டாங்கியின் அடியில் மறைந்து கொள்ளும்படி நேரிட்டது. எதிரி விமானங்களோ ஒன்றன் பின் ஒன்றாகப் பறந்துவந்து குண்டுகளை வீசிக்கொண்டிருந்தன. வானத்தை கண்காணிக்குமாறு ஏற்பாடு செய்து விட்டு, நேரடியான ஆபத்து ஏற்பட்ட போது மட்டுமே தொழிலாளர்கள் பழுது பார்ப்பதைவிடுத்து மறைவிடத்திற்குச் சென்றனர்.''

''பெரும்பாலான டாங்கிகள் பன்முறை பழுது பார்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்டன. உதாரணமாக, 214 என்ற எண் பொறிக்கப்பட்ட டாங்கி நான்கு முறை பழுது பார்க்கப்பட்டது. இதை ஐந்தாவது முறை பழுது பார்ப்பதற்காகத் தொழிற்சாலைக்குக் கொண்டு வந்த போது மக்காரவ் கேட்டார்:

மீண்டும் 214வது டாங்கியா?''

''எங்களுக்கு 'காயம்' மட்டுமே பட்டுள்ளது. உங்கள் உதவியோடு நாளை மீண்டும் சண்டையில் இறங்குவோம். எங்களுக்கு எவ்வளவு முறை காயம்பட்டதோ அவ்வளவு முறை பாசிச டாங்கிகளை ஒழித்துக்கட்டினோம் என்று ஏதோ மன்னிப்பு கேட்பதைப் போல் கமாண்டர் பதிலளித்தார்.''

டாங்கிகளைப் பழுது பார்ப்பதால் மட்டும் டாங்கி இழப்புகளை ஈடுசெய்ய எங்களால் முடியவில்லை. படையை பலப்படுத்துவதற்காக அக்டோபர் 5ஆம் திகதி கர்னல் பேலியின் டாங்கி பிரிகேடு வோல்காவின் இடது கரைக்கு வந்தது. அடுத்த நாள் காலை வாக்கில் இந்த பிரிகேடின் 15 டாங்கிகள் நகரத்திற்கு அனுப்பப்பட்டன. அன்று காலையே அவை இருப்புப் பாதையின் ஓரத்திற்கும் ஸ்குல்ப்தூர்னயா சாலையோரத்திற்கும் சென்று, மறைவாக நிற்கக்கூட நேரமின்றி சண்டையில் இறங்கின. அச்சண்டை பெரும் வெற்றியைத் தந்தது. முதல் ஒரு மணி நேரத்திலேயே 8 பாசிச டாங்கிகள் அழிக்கப்பட்டன. ஏராளமான பாசிஸ்டுகளும் ஒழித்துக் கட்டப்பட்டனர்.

அக்டோபர் 6ஆம் திகதி நடுப்பகலில் குண்டு வீச்சும் ஆற்றைச் சுடுவதும் சிறிது குறைந்தன. கிழக்குக் கரையில் எஞ்சிய கர்னல் பேலியின் டாங்கிகளை ஃபெர்ரியில் ஏற்றத் துவங்கினர். ஆனால், ரீ-34 ரக டாங்கியுடன் முதல் ஃபெர்ரி நடு ஆற்றை அடைந்தபோது மேலே பாசிச விமானங்கள் வட்டமிட ஆரம்பித்தன, அவை சிறு சிறு குண்டுகளை வீசின. அவற்றில் ஒன்று ஃபெர்ரியின் வழிதிரும்பும் கருவியையும் என்ஜினையும் பாதித்தது. பெர்ரி டாங்கியுடன் ஆற்றோட்டத்தின் போக்கில் சென்றது. இவ்வாறு ஆற்றோட்டத்தில் மிதந்து சென்றதைப் பற்றி டாங்கி கமாண்டர் சார்ஜன்ட் மேஜர் பியோத்தர் ஸீபின் பின்வருமாறு கூறுகின்றார்:

''முதலில் நானும் மற்ற டாங்கி வீரர்களும் குண்டு சிதறல்கள், இயந்திரப் பீரங்கித் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கும் பொருட்டு டாங்கியின் அடியில் பதுங்கினோம். பின்னர் ஃபெர்ரியின் தரையில் படுத்தபடியே அடுத்த என்ன நடக்கப்போகிறது என்று காத்திருந்தோம். நல்ல காலமாக வடமேற்குக் காற்று வீசியதால், டாங்கியுடன் ஃபெர்ரி இடது கரைக்கே திரும்பி வந்தது. கரையில் இறங்கி மீண்டும் ஃபெர்ரி மார்க்கத்தை அடைந்தோம்.''

ஆற்றைத் திரும்பியும் கடந்து வந்த கர்னல் பேலியின் டாங்கிகள் ''பாரிக்காதி'' தொழிற்சாலை மற்றும் குடியிருப்பின் வட மேற்குக் கோடியில் தற்காப்பு நிலைகளை மேற்கொண்டன.

அக்டோபர் 17ஆம் திகதி ஜோலுதியெவ், கொரிஷ்னி, கூர்த்தியெவ் ஆகியோரின் டிவிசன்களும் பேலியன் டாங்கி வீரர்களும் ''பாரிக்காதி'' தொழிற்சாலையின் மேற்குக் கோடியை நோக்கி முன்னேறிய எதிரியின் இரண்டு காலாட்படை டிவிசன்கள், 150 டாங்கிகளுக்கு எதிராக கடுமையான சண்டையில் இறங்கினர். எதிரியின் எல்லாத் தாக்குதல்களும் முறியடிக்கப் பட்டன. எரிந்து போன 16 எதிரி டாங்கிகளும் 900 எதிரிப் பிணங்களும் போர்க்களத்தில் கிடந்தன. நாங்கள் 3 டாங்கிகளை டாங்கி வீரர்களோடு இழந்தோம்.

அக்டோபர் 14-17இல் மிகக் கடுமையான சண்டைகள் நடந்த போது பாசிஸ்டுகள் டிராக்டர் தொழிற்சாலை, ''பாரிக்காதி'' தொழிற்சாலைக்கு எதிராக நூற்றுக்கணக்கான டாங்கிகளை ஏவினர். எங்களுடைய டாங்கி வீரர்கள் - மேலே கூறியபடி - மறைவுகளில் நின்றபடி சுட்டனர். பேலியின் பிரிகேடில் 20 டாங்கிகளே எஞ்சிய போதிலும், அவர்கள் விஞ்சி நின்ற எதிரியின் தாக்குதலை எதிர்த்து சமாளித்தனர். பல ஜெர்மானிய டாங்கிகளைத் தகர்த்து எரித்தனர். முக்கியமானது என்ன வெனில், 5 டிவிசன்கள் அடங்கிய எதிரியின் முக்கிய தாக்குதல் படைத் திரட்டு விரிந்து பரந்து, வோல்காவின் ஓரமாகத் தெற்குத் திசையில், 62வது படையின் பக்கவாட்டில் தாக்குமாறு விடவில்லை என்பதாகும்.

அக்டோபர் 14ஆம் தேதி பாசிஸ்டுகள் டிராக்டர் தொழிற்சாலைப் பகுதியில் உட்புகுந்தனர். இப்போது டாங்கிகளை வோல்காவின் கரையிலும் பள்ளங்களிலும் கைவசமிருந்த சாதனங்களைக் கொண்டு பழுது பார்க்கும்படி நேரிட்டது. பழுது பார்த்த டாங்கிகளை மிக அவசியமாகத் தேவைப்பட்ட இடங்களுக்கு நகரும் சுடும் சாதனங்களாக உடனடியாக அனுப்பினோம். இவற்றுடன் துப்பாக்கிப்படை யூனிட்டுகள் அதிக உறுதியோடு போரிட்டன.

பாசிச டாங்கிகள் எண்ணிக்கையில் விஞ்சி நின்ற போதிலும் பல நேரங்களில் எங்களுடைய டாங்கிகளுக்கு எதிராக செயலற்றுப் போயின. நன்கு வேவு பார்த்ததாலும், டாங்கிகளை நன்கு இடம் மாற்றியதாலும் [நகர்ந்து செல்ல இயலாத டாங்கிகளை இழுத்துச் சென்றோம்], அவற்றை நன்கு மூடி மறைத்ததாலும் இவ்வாறு எதிரி டாங்கிகளை செயலற்றுப்போகச் செய்ய முடிந்தது.

எதிர்த்தாக்குதல்களில் எங்களுடைய டாங்கிகள் எப்போதும் காலாட் படையுடனும் பொறியியல் பிரிவு வீரர்களுடனும் சேர்ந்து இயங்கின. இவை நேரடியாகச் சுட்டு, பெரும் தடைகளைத் தகர்த்தன. தாக்கிய இலக்குகளை எதிரியின் பொது தற்காப்பு நிலைகளில் இருந்து தனியே பிரிந்தன. தம் கடமையை நிறைவேற்றியதும் இவை திரும்பின அல்லது மறைவிடங்களில் நன்கு மறைக்கப்பட்டன.

நகரத்தில் நாங்கள் தாக்கியபோது, 5க்கு மேற்படாத டாங்கிகள் அடங்கிய சிறுகுழுக்களைப் பயன்படுத்தினோம். எங்களிடம் டாங்கிகள் குறைவாக இருந்தது மட்டும் இதற்குக் காரணமல்ல, நகரத்தில்,அதுவும் இடிபாடுகளில் கிடக்கும் ஒரு நகரத்தில் டாங்கிகளைப் பெருமளவில் பயன்படுத்துவது சிக்கலானதாக, விவேகமற்றதாக இருந்தது என்பதும் இதற்குக் காரணமாகும்.

நகரத்தில் எந்த ஒரு தரப்பு தாக்குகிறதோ அத்தரப்பு காலாட் படைக்கும் டாங்கிகளுக்கும் இடையிலான ஒற்றுமையின் மீது விசேட அக்கறை செலுத்த வேண்டும்.

போர்க்களத்தில் பட்டாலியன், ஸ்குவாட்ரன், டாங்கி கம்பெனி ஆகியவைதான் முக்கியமாக ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு இயங்கிய படைப்பிரிவுகளாகும். நகர சண்டையிலோ பல நேரங்களில் காலாட்படை பிளாட்டூன், டாங்கி பிளாட்டூன், பீரங்கிப்படை பிளாட்டூன் ஆகியவை தான் இத்தகைய பிரிவுகளாயிருந்தன. **தொடரும்......**

# சந்திரிகாவும் செய்தித் தணிக்கையும் கண்களை மூடினால் உலகம் இருளாது !!

நல்லூர் குண்டுத் தாக்குதலும், யாழ்மேஜர் சிவபாலன் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் என பன்னிரண்டுபேர் போய்முடிந்த கதை மிகச் சிறுத்துப் போய், ஓயாத அலைகள் இரண்டு என்பது இராட்சத தோற்றத்துடன் சிங்கள அரசை இடைவிடாது பயமுறுத்திக் கொண்டிருக்கின்றது. சிறீலங்கா அரசோ அதனை மறைக்கவும் மறுக்கவும் எடுக்கின்ற முயற்சிகள் பலன் தருவதாய் இல்லை. ஓயாத அலைகள் இரண்டு அடியின் தார்ப்பரியம் அப்படி. சிங்களப்படையினர், இத்தகு பேரிடியை இதற்கு முன்னர் சந்தித்திருப்பர் என்பதற்கு சாத்தியம் இருக்கவில்லை.

தொன்னூற்று ஆறாம் ஆண்டு, விடுதலைப் புலிகள் தோல்வியின் விளிம்பில் நிற்கின்றார்கள் என்று, அமைச்சர் ரத்வத்தை சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த காலப்பொழுதில், விடுதலைப் புலிகள், முல்லைத்தீவுத் தளம்மீது நடத்திய ஓயாதஅலைகள் என்பது பெரும் தாக்குதலும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதல் என்பதிலும் சந்தேகம் இல்லை.

விடுதலைப் புலிகளின் படைக்கல சக்தியை, புதிய தளம் ஒன்றுக்கு நகர்த்திய பெருமைக்குரிய தாக்குதல் அதுவாகும். விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றலையும், படைநிலையையும் மரபுப்படையணி நோக்கிய திசையில் கொண்டுசென்ற தாக்குதலாகவும் ஓயாதஅலைகள் அமைந்தது.

அதேவேளை, ஓயாத அலைகள இரண்டு தாக்குதல் நடவடிக்கையானது, தற்போதைய நிலையில் உயர் சிறப்பைப் பெறுகின்றது. இத்தாக்குதல் வெற்றியானது, வடக்கே, சிங்களத்தின் இருப்பை கேள்விக்குறியாக்கும் திசைவழியே கொண்டுசெல்லும் என்பதில், சிங்களத்திற்குக்கூட சந்தேகம் இருப்பதாகத் தெரியவில்லை.

பலாலியில் இருந்து ஆனையிறவு ஈறாக கிளிநொச்சி வரையிருந்த இராணுவத் தொடர்புவலை, கிளிநொச்சித் தளத்தை மிகவும் பலம் வாய்ந்ததாகவும், ஆயத வழங்கல் விநியோகப் பாதை பிரச்சினைகளின்றி வாய்க்கப் பெற்ற இறுக்கமான தளமாகவும் கிளை பரப்பியிருக்கக்கூடிய சாதகத்தை வழங்கியிருந்தன. ஆனையிறவுப் பெரும்தளத்தை காவல்காக்கின்ற காவலாளிக்குரிய மிடுக்குடன் அது, முன்னின்று சண்டித்தனம் காட்டியது.

மறுமுனையில் தரைப் பாதையமைக்கும் வெறியுடன், கடுமையாக முயற்சித்துக் கொண்டிருக்கும் ஜெயசிக்குறுப் படையணியை கண்டியணைத்து முத்தமிடவும், கிளிநொச்சித் தளம் ஆவலோடு காத்திருந்தது.

சிறீலங்கா இராணுவத்தின் திட்டத்தின்படி, அதன் பிரதான விநியோகப் பாதையின் முக்கிய பாதுகாப்பு மையங்களில் ஒன்றாக கிளிநொச்சித் தளமும் அமைந்திருந்தது. அதற்குக் கொடுக்கப்பட்ட வேலைகளும் அதிகமானதும் முக்கியமானதுமாகும்.

இந்தநிலையிலேயே, தமிழீழத் தேசியத் தலைவ?ன் நேரடி மேற்பார்வையில், ஓயாதஅலைகள் இரண்டுக்கான திட்டம் தயாராகியது. எதிரி முந்துவதற்கிடையில் நாம் முந்திக் கொள்ளவேண்டும். அவன் எம்மை நெருங்குவதற்கிடையில் நாம் அவனை நெருங்கி விடவேண்டும் என்ற தேசியத் தலைவரின் வாக்கு, களத்தில் பெருவெற்றியைக் குவித்திருக்கின்றது. அடுத்த நகர்வுக்கு சிங்களம் தயாராகிக் கொண்டிருக்க, அதன் உயிர்நிலையில் ஓங்கி பெரும் குத்து விடப்பட்டுள்ளது.

இன்று, ஆனையிறவுத்தளம், காவலாளி இல்லாத பரிதாபத்திற்கு ஆளாகியுள்ளது.

> ***காவலாளி இல்லாத பரிதாபத்திற்கு ஆளாகியுள்ளது. விடுதலைய் புலிகள் இலகுவில் நெருங்குவதற்கு வாய்ய்புக்கள் அதிகம் என்பது சிங்களத்தின் கவலை.***

விடுதலைப் புலிகள் இலகுவில் நெருங்குவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என்பது சிங்களத்தின் கவலை. விடுதலைப் புலிகளிடம் தற்போதுள்ள ஆயதவசதிகள், ஆனையிறவை கைப்பற்றும் துணிவை அவர்களுக்கு வழங்கி விடும் என்பதுடன், அதற்கான ஆவலை அவர்களிடம் தூண்டி விடும் எனவும் சிங்களம் தற்போது கவலைகொண்டுள்ளது. ஆனையிறவுத் தளம் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்தாலோ அல்லது, அதன் ஒருபகுதியை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலோ, தென்மராட்சியில், இராணுவ ஆக்கிரமிப்பு விஸ்தீரணம் படிப்படியாகக் குறைந்து, பிடி தளர்ந்து போய்விடும் எனவும், சிங்களம் கவலை கொள்கின்றது.

இதில் இனங்காணமுடியாத தவிப்பு எதில் இருக்கின்றது என்றால், விடுதலைப் புலிகளிடம் எவ்வகையான ஆயுதங்கள் இருக்கின்றன. டாங்கிகள் எத்தனை வைத்திருக்கின்றனர். ஆட்டிலறிகள் எவ்வளவு? தொடர்ந்து தாக்கவல்ல ஆயுதசக்தி அவர்கள் வசம்உண்டா, டாங்கிகள் எத்தனை? கவசவாகனங்கள் எத்தனை? விமானங்கள் உண்டா? என்பவை தான் தற்போதைய சிங்களத்தின் பெரும் கலக்கமாக உள்ளன.

கிளிநொச்சி போன்ற பெரும் தாக்குதல்களில் கைப்பற்றப்படும் ஆயுதங்களின் பட்டியலை வெளியிடுவதில் விடுதலைப் புலிகள் அவ்வளவாக ஆர்வம் காட்டவதாகத் தெரியவில்லை. ஆகவே இராணுவம் இழக்கும் கனரக ஆயுதங்களும், இராணுவத் தளபாடங்களும், விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்படுகின்றனவா அல்லது அழிபட்டுப் போகின்றனவா என்பது பிரச்சினைக்குரிய விவகாரமாகவே சிங்களத்தைக் குடைந்து கொண்டிருக்கின்றது.



எதிரியின் ஆயுதவலுவைக் சரியாகக்கணிக்காது, பாதுகாப்பு ஏற்பாடுகளையோ, இராணுவ நடவடிக்கைகளையோ மேற்கொள்வது முட்டாள்தனமானது என்பதை சிங்களமும் புரிந்துள்ளதுபோலும். அதனாலேயே இந்தப் பெரும்குழப்பம்.

இதில் இன்னொரு முக்கிய விடயமும், அம்பலமாகி அம்மணமாகி நிற்கின்றது. அதாவது இந்த வெற்றிகரமான தாக்குதலால், சந்திரிகா அரசால் கொண்டுவரப்பட்ட செய்தித் தணிக்கையே பரிதாபகரமாக அம்மணமாகி நிற்கின்றது. அதன் உண்மை உருவத்தை உலகம் தெளிவாகப் பார்க்க, கிளிநொச்சித் தாக்குதல் வழிவகை செய்துவிட்டது.

கொழும்புப் பத்திரிகைகளிலும், பிறசெய்தி ஊடகங்களுக் கூடாகவும் வெளிவரும் யுத்தநிலவர ஆய்வுகள், பிற இராணுவத் தகவல்கள் என்பன விடுதலைப் புலிகளால் படிக்கப்படுகின்றன, அவர்களால் அறியப்படுகின்றன.

> ***இதில் இனங்காணமுடியாத தவிய்பு எதில் இருக்கின்றது என்றால், விடுதலைய் புலிகளிடம் எவ்வகையான ஆயுதங்கள் இருக்கின்றன. டாங்கிகள் எத்தனை வைத்திருக்கின்றனர். ஆட்டிலறிகள் எவ்வளவு? தொடர்ந்து தாக்கவல்ல ஆயுதசக்தி அவர்கள் வசம்உண்டா, டாங்கிகள் எத்தனை? கவசவாகனங்கள் எத்தனை? விமானங்கள் உண்டா? என்பவை தான் தற்போதைய சிங்களத்தின் பெரும் கலக்கமாக உள்ளன.***

அவற்றின் துணையுடன் தாக்குதல் திட்டங்களை வரைந்தே, இராணுவத்தினர் மீதான தாக்குதல்களைப் புலிகள் வெற்றிகரமாக நடத்துகின்றனர் என்பது, சந்திரிகா அம்மையாரின் செய்தித்தணிக்கைக்கான தலையாய காரணமாக அமைந்தது. அதாவது யுத்தம்பற்றிய செய்தியை, இராணுவ அதிகாரியைக்கொண்டு தணிக்கை செய்து வெளியிடுவதன் மூலம் விடுதலைப் புலிகளின் தாக்குதல் திறனை மடக்கிப்போடலாம் என்பது சந்திரிகா அம்மையாரின் நொண்டிச்சாட்டு என்பதை, அறியாதாரும் இப்பொழுது இந்த வரலாற்றுத் தாக்குதலின் பெறுபேறுகளில் இருந்து மிகத் தெளிவாக அறிந்து கொண்டுள்ளனர்.

இராணுவத் தோல்வியை சிங்களமக்கள் அறிந்து கொள்ளாமல் மறைத்து, பல வீனமாகிக் கொண்டிருக்கும் தமது ஆட்சியை காக்கவே சந்திரிகா அரசு இந்த யுத்தச் செய்தித் தணிக்கையை கொண்டு வந்தது என்பதை, சிங்கள மக்களுக்கு விளங்க வைக்கும் விதத்தில், கிளிநொச்சிப் பெருந்தாக்குதல் அமைந்துள்ளது. சிறீலங்காவின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியாலேயே ஒத்துக் கொள்ளப்பட்ட, வரலாற்றில் முன்னெப்போதும் சந்திக்காப் பெரும் இழப்பையும் தோல்வியையும் சிங்களப்படைக்குக் கொடுத்த, இந்த ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கைக்கு, எந்தத் தகவலை, எந்தச் செய்தியை, எந்தப் பத்திரிகையை, எந்தவானொலியைக் கேட்டு பார்த்து விடுதலைப் புலிகள் திட்டம் வகுத்தார்கள் என்பதை, சந்திரிகா அம்மையார்தான் விளக்கவேண்டும். தமிழ்மக்களுக்கல்ல... சிங்கள மக்களுக்கே அந்த விளக்கம் அவரசமாகத் தேவைப்படுகின்றது. ❉

– சுப்பு –

# இலண்டனில் சுழற்சிமுறை விழிப்புப் போராட்டம்




சிறிலங்கா அரசாங்கம் தமிழ்ப் பகுதிகள் மீது மேற்கொண்டு வரும் பொருளாதாரத் தடையை எதிர்த்தும் நிவாரண வெட்டைக் கண்டித்தும் வன்னியில் மக்கள் தொடர்ச்சியாக மறியல் போராட்டங்கள் நடாத்தி வருகின்றனர். இம் மக்களின் மனிதாபிமான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் சிங்கள அரசு உணவுத் தடையை ஆயுதமாகப் பயன்படுத்துவதைக் கண்டித்தும் அதை வெளி உலகிற்குக் கொண்டு வரும் நோக்குடனும் இலண்டனில் தமிழர் புனர்வாழவுக் கழகமும் தமிழர் மனித உரிமை மையமும் இணைந்து சுழற்சி முறையிலான விழிப்புப் போராட்டத்தை பிரதி வெள்ளி தோறும் நடாத்தத் திட்டமிட்டது தெரிந்ததே.

இதன்படி செப்டம்பர் மாதம் 18ம் திகதியும் 25ம் திகதியும் முறையே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் முன்பாகவும், சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்பாகவும் விழிப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இந்த வகையில் அக்டோபர் 2ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணி தொடக்கம் பிற்பகல் 5மணி வரை பிரித்தானிய பிரதமரின் உத்தியோக பணி மனைக்கு முன்பாக விழிப்புப் போராட்டம் நடைபெற்றது. இதில் குறிப்பிடத்தக்க பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டு, தமது உணர்வை வெளிப்படுத்தினர். இவ் விழிப்புப் போராட்டத்தில் நியூகாம் தமிழர் ஐக்கிய சங்கம், றெட் பிரிட்ஜ் தமிழ்ச் சங்கம், கிங்ஸ்டன் மனித உரிமைக் குழு ஆகிய மக்கள் அமைப்புக்கள் தமது பதாதைகள் சகிதம் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். சுமார் 6 மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்களையும் மனிதாபிமானமற்ற பொருளாதாரத் தடை நடவடிக்கையையும் சுட்டிக்காட்டும் சுலோகங்கள் பிரித்தானிய நாட்டு மக்களை மிகவும் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது, பிரித்தானியப் பிரதமரினதும், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகரினதும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினதும் முகவரியிடப்பட்ட அஞ்சலட்டைகள் பிரித்தானிய மக்களிடம் கையளிக்கப்பட்டன. இவ் அஞ்சல் அட்டையில் சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் பொருளாதாரத் தடைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வேண்டப்படும் வசனங்கள் பொதிந்திருந்தன.

இறுதியாக பிரித்தானிய பிரதமருக்கு பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள் சார்பில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.





# ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு உதவத்தயார் ஆனால் சிறிலங்கா அரசு தொடர்ந்தும் அலட்சியம்

- ❇ ஊரடங்கு வேளையில் இனந்தெரியாத நபர்களால் தடயங்கள் அழிக்கப்படுகின்றன
- ❇ பருவ மழை தொடங்கினால் புதைகுழிகளை தோண்டுதல் சாத்தியமற்றதாகி விடும்

**யா**ழ்ப்பாணம் செம்மணி புதைகுழிகளைத் தோண்டுவதற்கு உதவ ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு உதவத் தயாராக உள்ளது. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவி திருமதி மேரி றொபின்சன் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு தெரிவித்துள்ளார்.

அதே வேளை வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் சங்கம் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணைக்குழுத் தலைவி திருமதி மேரி றொபின்சனுக்கு அனுப்பிய மகஜரில் செம்மணிப்பகுதியில் ஊரடங்குச் சட்ட வேளைகளில் இனந்தெரியாத நபர்கள் நடமாடுவதாகவும் இவர்கள் புதைகுழிப் பிரதேசங்களில் புதைக்கப்பட்டுள்ள சடலங்களின் தடயங்களை அழித்து பௌதீக ரீதியான மாற்றங்களை மேற்கொள்வதாகவும் செம்மணிப் பாதுகாப்பு நிலைமைகள் மிகுந்த சந்தேகங்களை ஏற்படுத்துவதாகவும் செம்மணியை பாதுகாக்க சுதந்திர பாதுகாப்பு அமைப்பொன்றை ஏற்படுத்த சிறிலங்கா அரசாங்கத்தை கோரிய போதிலும் இன்று வரை இப்பகுதி ஊரடங்கு வேளையில் சிறிலங்காப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கிறது எனவும் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டு 3 மாதங்களாகியும் சிறிலங்கா அரசாங்கம் விசாரணைக்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்காது உள்ளதெனவும் தெரிவித்துள்ளது.

மேலும் சாதாரண மழைக்கே வெள்ளக்காடாக காட்சியளிக்கும் இப்பிரதேசத்தில் பருவ மழை தொடங்கினால் புதை குழிகளைத் தோண்டுவது சாத்திய மற்றதாகி விடும் எனவும் எனவே விரைவில் புதைகுழிகளைத் தோண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட சிறிலங்கா அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமெனவும் அம் மகஜர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுத் தலைவியை கோரியுள்ளது.

# காட்டிக் கொடுப்பிற்கு சிறிலங்கா அரசின் கைமாறு

வவுனியாவில் உள்ள புளட் குழுவினரின் சித்திரவதை முகாம்களை மூடிவிட வேண்டுமென சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு விடுத்துள்ள கோரிக்கையானது புளட் குழுவிற்கு மட்டுமல்ல ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் அசௌகரியங்களை

ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐய மில்லை. ஏனெனில் இக்கோரிக்கைகள் மூலம் சந்திரிகா அரசு சித்திரவதை முகாம்களை நடத்துவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது என்பதை சர்வதேச அமைப்பு வெளிக்காட்டியுள்ளது என்று கூட கூறலாம். சந்திரிகா குமாரதுங்காவை தொடர்ந்து அவர் சித்திரவதை முகாம் களையும் படுகொலைகளையும்

கண்டிப்பதன் மூலம் ஆட்சிக்கு வந்தவர். இந்த நிலையில் அவரின் ஆட்சியின் கீழ் சித்திரவதை முகாம்கள் செயல்படுகின்றன என சர்வதேச மன்னிப்பு சபை பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளமை ஆட்சியாளர்களுக்கு பெரும் தலை குனிவே ஆகும். இதேவேளை சர்வதேச மன்னிப்பு சபையின் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் மறுத்துக்கூறவோ அன்றி தமக்கு இது குறித்து எதுவும் தெரியாதோ என்றோ கூறிவிடமுடியாது. ஏனெனில் ஒரு புறம் இச்சித்திரவதை முகாம்கள் உள்ளன என்பதை உறுதிப்படுத்த அதிலிருந்து தப்பிவந்தவர்களே சாட்சியாக உள்ளனர்.

இதேசமயம் தமது தடை முகாம்கள் சித்திரவதை முகாம்கள் இல்லை என்பதை புளட் குழு மறுப்பதாக இல்லை. சில சமயம் மேற்குறிப்பிட்ட பெயரில் அவை இல்லை என அவர்கள் மறுப்பதாக இருக்கலாம். ஆனால் புளட் குழு கைது செய்தல் தடுத்து வைத்தல், சித்திரவதை புரிதல் என்பதை நிறைவேற்றியே வந்துள்ளது-வருகின்றது. அதாவது ஜனநாயக நீரோட்டத்திலும் சிறிலங்கா வின் தேசிய நீரோட்டத்திலும் கலந்துவிட்டதாக பிரகடனம் செய்து வந்த புளட்

குழு ஆயுத முனையில் தனது காட்டு தர்பாரை நடாத்திக்கொண்டிருக்கிறது.

இது அரசாங்கத்திற்கு தெரிந்திருந்தும் அரசாங்கம் அது குறித்து நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாது இருப்பது அரசாங்கத்தின் ஆசீர்வாதம் இதற்கு உண்டு என்பதையே வெளிக்காட்டுகிறது எனலாம்.

அதாவது தமிழ் இனத்தின் கோடரிக் கொம்புகளான தமிழ் குழுக்களிற்கு அரசாங்கம் சில சலுகைகளை செய்து வருகின்றது. இது தமிழ் தேசியத்தை அழித்தொழிப்பதற்கு தமிழ் குழுக்கள் செய்யும் உதவிக்கு கைமாறாகும். இதே சமயம் சிங்கள பேரினவாதத்திற்கு எந்தவித இழப்புமின்றி வழங்கப்படும் உதவியாக இது இருக்கவேண்டியது அவசியமானதாகும்.

இந்த நிலையில் தமிழ்குழுக்கள் நடாத்திவரும் சித்திரவதை முகாம்கள் இதுவரையில் அரசாங்கத்தின் அனுமதி யுடனும் அதே கொள்கையுடனும் தொடர்புடையதாகும். ஆகையினால் சர்வதேச மன்னிப்பு சபை சிறிலங்கா அரசாங்கத்திடம் தடைமுகாம்களை மூடிவிடவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளமை நியாயமானதாகும் - பொருத்தப்பாடனாதாகும்.

ஆனால் சந்திரிகா அரசாங்கம் அதை எந்தளவு தூரம் கருத்தில் கொள்ளும் நிறைவேற்றும் என்பது கேள்விக்குரி யதாகும். சந்திரிகா அரசாங்கம் மனித உரிமைகள் பற்றி பேசுகின்றதே தவிர அதனை கைக்கொள்ளும் அரசு அல்ல. அவ்வாறு கைக்கொள்ளும் அரசு ஆகியிருந்தால் அது தனது ஆயுதப்படையினர் மூலம் சித்தரை வதைகளையும் படுகொலைகளையும்

நிறைவேற்றி கொண்டிருக்கமாட்டாது. இதைத்தவிர இக்கோடரிக்காம்புகள் பாராளுமன்றத்தினுள்ளும் வடக்கு கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவ த்தினருக்கும் நேரடியாகவே தமது உதவிகளை வழங்கி வருகின்றன. அதாவது பாராளுமன்றத்தில் அரசிற்கு ஆதரவாக கைதுாக்கி நின்றும் இக்குழுக்கள் இராணுவத்திற்கு உதவியாக காட்டி கொடுப்பதிலும் சித்திரவதை படுகொலை செய்வதிலும் துணை இருக்கின்றன. இந்த நிலையில் சர்வதேச மன்னிப்பு சபையின் குற்றச்சாட்டுகள் வழமைபோல் ஒரு காதால் கேட்டு மறுகாதால் விடும் விடயமாகவே நிச்சயம் இருக்கும்.

ஆகையினால் இச்சர்வதேச மன்னிப்பு சபையின் அறிக்கையானது புளட் குழு போன்ற ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்பிய தமிழ் குழுக்களின் சுயரூபத்தையும் சந்திரிகா குமாரதுங்க அரசின் போலித்தனத்தையும் உலகிற்கு காட்ட உதவுமே ஒழிய வேறு எந்த வகையான பயன்பாட்டையும் வழங்கிவிடப்போவதில்லை. ❃

---

# தீயெரிக்கும் நினைவுகள்

ஒரு பூங்காற்றின்
மென்தடவலாய் அந்த
நினைவுகள் வரும். மரங்கள்
எல்லாம் குளிக்குமாப்போல
மழைபெய்யுமே அந்தக்
குளிர்ச்சியான பொழுதுகளில்
யாருமற்ற தனிமையில் யன்னல்
கம்பிகளைப் பிடித்தபடி
வெளியே பார்க்கையில் மழை
வெள்ளத்தோடு நிரம்பிவரும்.
அலையலையாய் வளைந்து
தெளிந்து செம்மண் நிறமாய்
அந்தச் சோகம் ஓடிக்கரையும்
விழிக்குழிகள் நிரம்பி
இமைகளுக்கடியில் வழியும்.

எத்தனை நினைவுகள்,
சம்பவிப்புகள்,
கோடானுகோடியாய்ப்
படர்ந்து சங்கிலித் தொடராய்
நீண்டு அறுந்து மீண்டும்
தொடர்ந்து எண்ணிறைந்து
தியாக நெருப்புக்களைச் சுமந்து
நிற்கின்றது இம் மண். அந்த
நினைவுகளைத் தாங்கிய சிலரும்
மண்ணுக்காய் வீழ்ந்துபோக
தந்துவிட்டுப் போன நினைவு
எச்சங்கள் நெஞ்சுக்கூட்டுக்குள்
வாழுகின்றன.

வெண்நுரைப் பூக்களாய்
கரைமோதும் அலைகள்.
பனிபடர்ந்த காலைகளில் யாழ்
மண்ணின் தார்வீதிகள் ஜில்
என்று குளிரும். அந்த வீதிகளில்
ஒருகாலம் சனசமுத்திரம் நிரம்பி
வழியும். சிறுவர் சிறுமியர் வீதியின்
குறுக்கும்
மறுக்குமாக ஓடித்திரிவர். காற்று
உரசி ஒலிகள் அலைகளை மேவி
வந்தன. பழைய மிதிவண்டிகள்
உரசும் சத்தத்தோடு
மீன்பெட்டிக்காரர் சந்தைக்கு
மீன்கொண்டு போவார்கள்.
அதிகாலையில் கோவில்மணியும்
மாதா கோயில் மணியும்
கணீரெனக் கேட்கும். ஊர்
மெல்லவிழித்து சுறுசுறுப்புஅடையும்.

இப்போது ஆறுமணிக்கு
ஊர் அடங்கிவிடும். மெல்லிய
குருட்டு வெளிச்சத்தோடு
வீடுகளின் உள்ளே விளக்குகள்
சிணுங்கிச் சிணுங்கி உரியும்.

அது வெளியே
ஒளிப்பொட்டாய்த் தெரியும்.
எங்கும் அமைதி! மயானத்திலிருந்து
மீட்டுக்கொண்டுவரப்பட்ட
அமைதியாய் வீடுகள்
மூழ்கிக்கிடக்கும். எங்காவது
மக்கள் மெல்லிய குசுகுசுப்பாய்
தங்களின் முக்கிய தேவைகளுக்காய்
கதைத்துக்கொள்வார்.
குழந்தைகள் அழுகிற சத்தமும்
கேட்காது. வெளியே நிலா
இரவுபாலாய்க்
காய்ந்துகொண்டிருக்கும்.

எப்படி எங்கள் இரவுகள்
அழகிழந்து போயின.

ஏன் எமது பேச்சுக்களும்
மூச்சுக்களும் நின்றுபோனது.
எப்பிரதேசத்திலாவது அன்று
விடிகாலை இராணுவச்
சுற்றிவளைப்புக்களோடு
அவலமாய் விடியும். நாய்கள்
ஊரைச்சுற்றிச் சுற்றிக் குரைக்கும்.
பனையோலை வேலிகளும்
கிடுகுவேலிகளும் அறுபடும்.
காவலரணில் நிற்கும்
பச்சைப்பேய்கள் சன்னத்தம்
கொள்ளும்.

பாடசாலைப் பிள்ளைகள்,
ஊழியர்கள் உத்தியோகத்தர்கள்
அனைவருக்கும் அடையாள
அட்டைகள் வாழ்வின் முக்கிய
அங்கமாகப் போகும். அந்த
நிமிடங்களில் இதயம்
தொண்டைக்குழிவரை வந்து
துடித்துக்கொள்ளும்.

அவற்றுள் நிரம்பிய
எந்தக்கணங்களும் ஆபத்து
நிரம்பியவை. எந்த
நிமிடத்திலாவது பச்சைப்
பேய்களால் அடையாளம்
காணப்படலாம். அவளது
மரண சம்பவிப்புக்கள் ஒரு
சுற்றிவளைப்பிலோ அன்றி

திடுமுட்டான வீதிகளின்
திருப்பத்திலோ,
ஒரு குச்சொழுங்கையிலோ வயல்
வெளியிலோ நிகழலாம்.
தன்னைத் துரத்திவரும்
ரவைமழைக்குத்தப்பி ஒளித்து,
அவள் உயிர்தப்பிய
மயிரிழைக் கணங்கள் ஏராளம்.

எங்காவது
கரும்புலித்தாக்குதலுக்கான
இலக்கு கிடைக்கவேண்டும்
என்று ஒவ்வொரு நாளின்
காலையும் பெருத்த
நம்பிக்கையோடு எழுவாள்.
உறக்கமற்ற இரவின் பலனாய்
கண்கள் எரியும். உணவு
கிடைக்காத நாட்களும்
கிடைத்தும் உண்ணமுடியாத
நெருக்கடியான நிலைமைகளும்
உடலிற் தெரியும். ஆனால்
மனதில் எப்போதும்போல இந்த
இலக்கிற்கான கனவும்
நம்பிக்கையும் விரிந்திருக்கும்.

அது ஒரு
கரும்புலித் தாக்குதலுக்கான
முயற்சி. ஆக்கிரமிக்கப்பட்ட யாழ்
மண்ணின் வீதிகள்
குச்சொழுங்கைகள் இடிபாடுண்ட
வீடுகள், நெருஞ்சி முட்கள்
படர்ந்தசெம்மண் பாதைகள்
யாவும் தேடியலைந்து அந்த
இலக்குக் கிடைத்தது. அந்த
இலக்கு வெற்றியாய்
முடியவேண்டும். நன்றாய் அமைய
வேண்டும். என்று அவள் மனம்
பிரார்த்தித்துக் கொண்டது.
நீண்ட நாட்கள் நெஞ்சுக்
கூட்டுக்குள் பொத்திவைத்திருந்த
கரும்புலிக்கனவு ஒருநாள் யாழ்
மண்ணில் நிறைவேறும் என்ற
அவள் எண்ணத்தின் அடிக்கடி
சொல்லும் வார்த்தைகளின்
செயல்வடிவம் அது.

அந்த முக்கிய நிகழ்வுக்கு
சிங்கள இராணுவம் பெருந்
திரளாக வரும். நாம்
அச்சமின்றித் திரிந்த வீதியின்
மருங்காய் அமைந்த மைதானம்.
காலம் காலமாய் பெருவிழாக்கள்.
முகம்காட்டி நிற்கும் சிங்கள
இராணுவத்திற்கு அது பலத்த
அடியாக இருக்க வேண்டும்
என்று சொல்லிப்போனாள்.

எல்லாம் தயார்படுத்தி
இதற்கான ஆயத்தமாக அவளை
அனுப்பியபோது அவளது
ஒட்டியுலர்ந்த உடலில் எலும்புகள்
துருத்திக்கொண்டிருந்தது.
உட்குழிந்த விழிகளில் பெரும்
நம்பிக்கை மீதமிருந்தது.
காத்திருந்து காத்திருந்து
எந்தக்கஷ்டகாலமோ, அந்த
இலக்கும் நெருக்கடியான
வேளையில் தவறிப்போனபோது
முகம்வாடிப்போய்
வந்துசேர்ந்தாள். அடுத்த
நாட்களில் மீண்டும்
புறப்படுவாள். செம்மண் ஓடிய
தெருக்களிலும்
குச்சொழுங்கைகளிலும்
இராணுவத்தின் கண்ணில்
இருந்து மறைந்தாவது
இலக்குத்தேடுவாள்.

பசி, வெயில், மழை, பனி,
குளிர்.. .. அந்த நாட்கள்
ஆபத்து நிறைந்தவை. அந்தக்
கணங்கள் நெஞ்சை
உருக்கவைப்பன. அவளது
நாட்கள் ஆழமானவை. பெரும்
இலக்குத் தேடிய பறவையாய்
திரிந்த அவளது கனவுகள்
விரிந்தவை. பெரும் தியாக
நெருப்பாக எங்களுக்குள்
தீயெரிந்தாள்.

வெயில் எரிக்கும் ஒரு நாள்
மதியம் இராணுவச்
சுற்றிவளைப்பு ஒன்றில் யாழ்
மண்ணின் வயல் வரம்பில்
அவளது குருதி ஓடி உறைந்தது.
உரசிவந்த காற்று அவள்
இறுதிமூச்சை சுமந்து வந்தது.

– சுதாமதி

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்
## அத்தியாயம் இருபத்திமூன்று

(தொடர்ச்சி)

அவர்கள் பகுதிகளைத் தனிமைப் படுத்தி, காப்பரண்களைக் கனொன் தாக்குதலாலும், தீச்சுவாலைகளை வீசும் கருவியாலும் ஒன்றன்பின் ஒன்றாக, முற்றாக அப்பகுதி அழிந்துபோகும் வரை தாக்கினார்கள்.

அவர்கள் நிலத்தடிக் காப்பரண்கள் இருக்கும் இடங்களை சித்திரவதை செய்து அறிந்துகொள்ள, போராளிகளை உயிரோடு பிடிக்க முயன்றார்கள். ஆனால் போராளிகளோ, சரணடைவதை விட எரிந்து சாவதை ஏற்றுக்கொண்டார்கள். கழிவுநீர்க் கால்வாய்களின் மூடிகளைத் திறந்து விச வாயுக்களை அவை நிரம்பும்வரை செலுத்தினார்கள். உயிரற்ற உடல்கள் நீரில் மிதக்கத் தொடங்கின.

ஆயினும் இஸட். ஒ. பி. தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தது. எப்போதாவது ஜெர்மன் ரோந்துப் பிரிவுகளைக் கண்டதும் தங்கள் காப்பரண்களில் இருந்து பாய்ந்து அவர்களை உக்கிரமாகத் தாக்கினார்கள். தற்கொலைப் பிரிவுகள் தங்களைத் தாங்களே நிச்சயமான மரணப் பிடிக்குள் வீசிக் கொண்டார்கள். ஜெர்மன் தரப்புச் சேதங்கள் அதிகரித்து ஆயிரக்கணக்கைச் சீக்கிரமே எட்டின.

ஸ்றூப் இடைவிடாமல் தொடர் தாக்குதல்களை நடாத்தினான். ஒரு குழுவாகச் செயற்படும் நிலைமை அற்றுப்போயும் கூடத் தங்கள் உள்ளுணர்வுகளின் வழிகாட்டலில் தொடர்ந்து யூதர்கள் போராடிக்கொண்டிருந்தார்கள்.

வைகாசி 14ஆம் திகதி மண்டெக், தனது குழுவில் எஞ்சியிருந்த பன்னிரண்டு 'மீட்பாளர் குழு' உறுப்பினர்களுக்கும் கூட்டம் ஒன்றை நடத்தினான். அவன் அவர்களுக்கு இரு தெரிவுகளை அறிவித்தான். முதலாவது அங்கேயே இருந்து இறுதிவரை போராடி மடிவது அல்லது டொவ்வின் வழிகாட்டலில் கழிவுநீர் வடிகால்கள் ஊடாகச் சென்று ஏதாவது ஒரு சுதந்திரப் போராட்டக்குழுவுடன் இணைந்து கொள்ளல் என்பவையே அவையாகும். டொவ், விசவாயு செலுத்தப்படும் இடங்களைத் தவிர்த்து அவர்களைக் கூட்டிச் செல்ல முடியும் என உறுதி அளித்தான்.

டொவ் 'சுவரின் கீழாக' மீண்டும் சென்றான். ப்றொவ்ஸ்கா 99 ஐ நெருங்கியபோது, அவன் உள்ளுணர்வுகள் ஏதோ பிழையாக இருக்கிறது என உணர்த்தியது. அவன் அக்கட்டடத்தைத் தாண்டி நேராக நடந்தான். பல்வேறு வசதியான இடங்களிலிருந்து பத்துப் பன்னிரண்டு பேர் அக்கட்டடத்தை அவதானித்துக் கொண்டிருந்ததை அவன் கூரிய கண்கள் கண்டுகொண்டன. வன்டவ்வை கெஸ்டபோ கைது செய்துவிட்டதா? இல்லையா என்று தெரியாவிட்டாலும் அக்கட்டடம் இனிப் பாதுகாப்பானது அல்ல என்பதை உணர அவனால் முடிந்தது.

இரவு மிகவும் காலம் தாழ்த்தித்தான் அவன் சேரிக்குள் திரும்பி வந்தான். அவனுக்குக் கூட காப்பரணைக் கண்டு கொள்வது மிகவும் கடினமாயிருந்த்து. ஏனெனில், கட்டடங்கள், வீதிகள் எதுவும் இருக்கவில்லை. இடிபாடுகள் மட்டும்தான் எஞ்சியிருந்தன. அவன் நெருங்க, நெருங்க இப்போது நன்றாகப் பழகிப்போய் சுட்டு பொசுங்கிய சதைகளின் நாற்றத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது. அவன் நிலத்துக்குக் கீழாகப் போய் கழிவு நீர் சாக்கடையில் எப்போதும் எடுத்துச் செல்லும் மெழுகுதிரி ஒன்றைக் கொளுத்திக் கொண்டான். அதனுடைய தடுமாறும் ஒளி அவர்களில் பட்டுத் தெறித்தது. டொவ் காப்பரணில் ஒரு அந்தத்தில் இருந்து மறு அந்தம் வரை நடந்தான். அப்படிப் போனபோது தட்டுப்படும் ஒவ்வொரு உயிரற்ற உடலருகேயும், மண்டியிட்டு தன் மெழுகுதிரியுடன் அமர்ந்து பார்த்தான். தீச்சுவாலை வீசும் கருவிகள் உடல்களை நன்றாகவே கருக்கி இருந்ததால், இன்னும் புகைந்து கொண்டிருந்த அந்த உடல்களை அடையாளம் காண முடியவில்லை. எரிந்திருந்த இந்தச் சடலங்களில் தான் அன்போடு நேசித்த மண்டெக்கின் உடல் எது என யோசித்துக்கொண்டான்.



வைகாசி 16, 1943. ஜெர்மனியர்கள் தங்கள் முதல் தாக்குதலைத் தொடங்கி 42 நாட்களாயிற்று. இஸட். ஒ.பி. தலைதூக்கி ஜெர்மனியரை விரட்டி நான்கு மாதங்களாயிற்று. கடைசி சைகையாக லாமற்ஸ்கா வீதியிலிருந்த பெரிய சினகோக்கை (யூதவழிபாட்டிடம்) வெடிமருந்து வைத்துத் தகர்த்தான், எஸ். எஸ். ஜெனரல் ஸ்றூப். இது போலந்தின் யூத மத குறியீட்டுப் பொருளாக நீண்ட காலமாகவே இருந்தது. சலமோனின் தேவாலயம், ரோமர்களிடம் வீழ்ச்சியடைந்தது. அதுபோலவே லாமாற்ஸ்கா சினக்கோக்கும் வீழ்ச்சியடைந்தது. வார்சோ சேரியின் பிரச்சினைகட்கான இறுதித் தீர்வு எட்டப்பட்டுவிட்டது என ஜெர்மனியர்கள் அறிவித்தனர்.

அழிவு பூரணமாயிருந்தது. முழுப் பரப்பிலும் எஞ்சியிருந்த எதுவும் மனித கண் மட்டத்துக்கு மேல் உயரமாக இருக்கவில்லை. பதினாறு துப்பாக்கிகளும் நாலு றைபிள்களும் கைப்பற்றப்பட்தாக ஸ்றூப் அறிவித்தான். மேலும் கட்டட சிதைவுகள் நல்ல மூலப் பொருட்களாக விளங்கும் என்றும் கைதிகள் எவருமில்லை என்றும் அறிவித்தான்.

இப்படியாகத் துல்லியமாக மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளூடேயும் சாகமறுத்த இஸட் ஒ. பீ. போராளிகள் இருந்தார்கள். சிதைவுகளிடையே போர் தொடர்ந்தது. எப்படியோ தப்பிப் பிழைத்துவிட்ட யூதர்கள் ஒருவரை ஒருவர் கண்டு பிடிக்கத் தொடங்கினர். இருவர் மூவரைக் கொண்ட 'எலிகள் பிரிவினர்' இரவில் ஜெர்மன் ரோந்துப் பிரிவுகளைத் தாக்கத் தொடங்கினர். ஜெர்மனியரும் போலந்து நீலப் பொலிசாரும் சேரியில் ஆவிகள் உலவுவதாக சத்தியமே செய்தனர்.

டொவ் வேறு ஆறு ஆயுதங்களைக் கண்டு கொண்டான். அவர்கள் தங்கள் எல்லோருக்கும் போதிய ஆயுதங்கள் கிடைக்கும் வரை காப்பரண்களை ஒவ்வொன்றாக அலசி ஆராய்ந்தனர். அவர்கள் இடத்துக்கிடம் நகர்ந்து கொண்டிருந்தாலும் சாவின் நாற்றமும் தோற்றமும் எங்கும் இருந்தன. இரவில் டொவ் அவர்களைச் சுவருக்குக் கீழாக சாக்டையூடாக வழி நடத்திச் சென்று உணவுக் களஞ்சியங்களை விரைவாகக் கொள்ளையடித்துத் திரும்பினர்.

போலந்தில் பல இடங்களிலும் யூதர்கள் புரட்சி செய்தாலும் அவர்களுடைய எழுச்சிகள் ஒரே முடிவையே கண்டன. சிறியளவாய் நேரம் பிந்தி ஆதரவில்லாமல் இப்படியாயின.

முழுப்பகல் நேரமும் டொவ்வும் மற்றைய ஆறுபேரும் நிலமட்டத்தின் கீழான புதிதாக அகழப்பட்ட காப்பரண்களில் இருந்தனர். ஐந்து நீண்ட துன்பமான மாதங்களுக்கு டொவ் லன்டவ்வோ அவனது தோழர்களோ பகல் வெளிச்சத்தைக் காணவில்லை. ஒருவர் பின் ஒருவராக அவர்கள் மரணத்தைத் தழுவிக் கொண்டனர். வார்சோவில் ஒரு தாக்குதலில் மூவரும் இருவர் தற்கொலை செய்தும் ஒருவர் பட்டினியாலும் இறந்து போயினர்.

டொவ்தான் கடைசியாக உயிரோடிருந்தவன். ஐந்து மாதங்களின் முடிவில் ஜெர்மன் ரோந்துப் பிரிவொன்று சாவின் விளிம்பில் அவனைக் கண்டுபிடித்தது. அவனது தோற்றம் மனிதனது தோற்றம் போன்று கூட இருக்கவில்லை. அவன் சிறிது உயிரூட்டப்பட்டு, எப்போதுமே அடிப்பதில் முடியும் விசாரணைக்காகக் கெஸ்டாப்போ தலைமையகத்துக்கு இழுத்துச் செல்லப் பட்டான். கெஸ்டா ப்போ அவனிடம் இருந்து எதையும் அறிந்து கொள்ள முடியவில்லை. டொவ் லன்டவ் பதின்மூன்று வயதில் சேரி எலி-சாக்கடை எலி-இடிபாட்டிடை எலி-திறமையான போலி ஆவணத் தயாரிப்பு நிபுணன் எனப் பல தரப்பட்ட நிலைகளிலிருந்த அவன் மீள் குடியமர்தலுக்காகக் குறிவைக்கப்பட்டான். சேருமிடம் ஓச்விற்ஸ். ✠

**லியோன் யூறிஸ்**

தொடரும்...

**வாசகர் கவனத்திற்கு !**

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் ஆழ்ந்த கருத்துள்ள கவிதைகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் ஆக்கங்களை 30 - 10 - 1998 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## சீருடன் எம்மினம்...

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:
'Kalathil',
Eelam House, 202 Long Lane, London SE1 4QB.

## இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

யுத்தத்தினால் சிறுவர் பாதிப்படைவது குறித்து நான் மிகவும் அக்கறை கொண்டிருக்கின்றேன். 14வருட கால யுத்தத்தினால் பாதிப்படைந்துள்ள தமிழ் சிறுவர்களின் விடயத்தில் அக்கறை செலுத்த மனோதத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்திருக்கின்றேன். இதைக் கூறியது யாருமல்ல. சிறிலங்காவின் அதி உத்தம ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா. நியூயோர்க்கில்"ஐக்கியநாடுகள் சபையின் தகவல் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர்கள் மகாநாட்டிலேயே சந்திரிகா அம்மையார் இவ்வளவு அக்கறையுடன் தமிழ் சிறுவர்கள் குறித்து ஆதங்கம் தெரிவித்துள்ளார். தமிழ் சிறுவர்களை இராணுவ இலக்குகளாக்கி கொன்று குவித்து வரும் சந்திரிகா- தமிழ் சிறுவர்களின் பசிக்கு உணவும் நோய்க்கு மருந்தும் மறுக்கும் சந்திரிகா- தமிழ் சிறுவர்களின் தாய் தந்தையரை அண்ணண் தம்பியரை அக்கா தங்கையரை ஈவிரக்கமின்றி தன் படை கொண்டு அழிக்கும் சந்திரிகா- தமிழ் சிறுவர்களின் தாய்மாரை சகோதர்களை தமிழ்ச் சிறுவர்களுக்கு முன்பாகவே தனது படையினரைக் கொண்டு பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தி பிஞ்சு உள்ளங்களில் தாங்கொணாச் சோகத்தையும் வெறுப்பையும் விளைவிக்கும் சந்திரிகா- கொடுமையிலும் கொடுமையாக தமிழ்ச் சிறுவர்களின் கல்வி வசதிகளை தடுத்து அடிப்படை கல்வி கூட அவர்களுக்கு கிட்டாது தடுக்கும் சந்திரிகா-நியூயோர்க்கில் உலகப் பத்திரிகையாளர் மத்தியில் தமிழ்ச் சிறுவர்களுக்காக நீலிக்கண்ணீர் உகுத்துள்ளார்.

ஆனால் சந்திரிகா தமிழ்ச் சிறுவர்களுக்காக உகுத்த முதலைக்கண்ணீர் உலரும் முன்பே அவரின் ஆட்சியில் வடக்கு கிழக்கில் 50000 சிறுவர்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 9 இலட்சம் சிறுவர்கள் போரினால் பாதிப்படைந்துள்ளனர் எனவும் 3 இலட்சத்து 80 ஆயிரம் சிறுவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் மேலும் 2 இலட்சத்து 50 ஆயிரம் சிறுவர்கள் போரினால் இடம்பெயரும் நிலையில் உள்ளனர் எனவும் வீரகேசரி பத்திரிகை கருகும் மொட்டுக்கள் என்ற தலைப்பில் 27.09.98 இல் வெளியிட்ட கட்டுரை தகவல் வெளியிட்டுள்ளது. கொடூர யுத்தத்தினால் யாழ் குடா நாட்டில் மட்டும் 20,600 சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை எனவும் யாழ்க்குடாநாட்டின் கரையோரப்பகுதிகளில் 80வீதமான சிறுவர்கள் போசாக்கின்றித் தவிப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் உள்ள 500 சிறுவர் பாடசாலைகளில் பயிலும் 15000க்கும் மேற்பட்ட சிறுவர்கள் போசாக்கின்மையால் வாடுவதாகவும் அக் கட்டுரை மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. வன்னியிலோ சந்திரிகாவால் தமிழ்ச் சிறுவர்கள் உணவுக்குத் துடிக்கின்றனர். தென்தமிழீழத்திலும் இதே கதை தான். போதாக்குறைக்கு சந்திரிகா அரசாங்கம் கொட்டுகின்ற குண்டுமழைகளினாலும் எறிகணைத் தாக்குதல்களாலும் வகை தொகையற்ற கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்களினாலும் தமிழ் சிறுவர்கள் மரணத்தின் விளிம்பில் வாழ்கின்றனர். இவ்வளவு சாதனைகளையும் செய்யும் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா தான் சர்வதேச பத்திரிகையாளரிடை தமிழ் சிறுவர்களுக்காக ஓலமிட்டுள்ளார். அதுமட்டுமல்ல தமிழ் மக்கள் மீது யுத்தத்தை திணித்து அவர்கள் வாழ்வதற்கு போராடியே ஆகவேண்டுமென நிர்ப்பந்திக்கும் சந்திரிகா வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் சிறுவர்கள் பலாத்காரமாக புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்படுவது குறித்து நான் அக்கறை கொண்டிருக்கின்றேன் எனவும் நச்சு மொழி பேசியுள்ளார். அமெரிக்காவில் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக பிரகடனப்படுத்தியதற்கு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு தான் நன்றி தெரிவித்ததாகவும் சந்திரிகா அம்மையார் எடுத்துக் கூறி பத்திரிகையாளரிடம் இருந்து விடை பெற்றுள்ளார்.

அவருக்கு யால்ரா வாசிக்கும் தமிழ்ப் பெயர் கொண்ட சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் இலக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச பயங்கரவாதமாக உருவெடுத்துள்ள புலிகள் இயக்கம் எவ்வாறு செயற்படுகின்றது என்பது தொடர்பான விவரங்கள் தங்கள் வசம் இருப்பதாகவும் இந்த தகவல்களைப் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளத் தாம் தயராக இருப்பதாக கூறியதும் அல்லாமல் புலிகள் இயக்கம் மத,கலாச்சார நடவடிக்கைகளின் பேரால் நிதி சேக?க்கும் போலி அமைப்புக்கள் மூலம் வெளிநாடுகளில் நிதி திரட்டும் வேலைகளில் ஈடுபடுகின்றது. இத்தகைய நடவடிக்கைகள் சர்வதேச ரீதியில் நாடுகளிடையே கூட்டுறவு அதிகரிப்பதன் மூலமும் இன்டர்போல் மற்றும் பாதுகாப்பு அமைப்புக்களின் ஒத்துழைப்பை பெறுவதன் மூலமும் தடுக்கப்பட முடியும் என ஆலோசனையும் அளித்துள்ளார். இதே கதிர்காமர் 1995 மார்கழி 31ம் திகதி வீரகேசரிக்கு அளித்த பேட்டியில் தலைவர் பிரபாகரனும் விடுதலைப்புலிகளும் இல்லையென்றால் தன்னால் தலை நிமிர்ந்து வாழ்ந்திருக்க முடியாது எனக் கூறியதை இன்று ஏனோ மறந்து விட்டார்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தால் போல் ஐக்கிய நாடுகள் சபையில் சந்திரிகா, இலங்கையில் இனரீதியான மனக்குறைகள் உள்ளன என்றே நாம் நம்புகின்றோம். இனரீதியான மனக்குறைகளை நாம் நாட்டிலுள்ள சகல இனரீதியான இன சமூக அரசியற் கட்சிகள் குழுக்களின் தலைவர்களின் பங்களிப்போடு அரசியல் கலந்துரையாடல் சமரசப்பேச்சுவார்த்தைகள் மூலம் அமைதியாகத் தீர்த்து வைக்கவே திடசங்கற்பம் பூண்டுள்ளோம். ஆனால் விடுதலைப்புலிகள் மட்டும் தமது இலக்கை சாதிப்பதற்கு வன் செயல் வழியைப் பின்பற்றுகின்றனர். எல்.ரீ.ரீ.ஈ யினர் தங்களை ஒரு விடுதலை இயக்கமாக கூறுகின்றனர். இவர்களின் இக் கூற்றானது சிறுபான்மை ஆட்சி இன வாதம் அடக்கு முறை என்பவற்றுக்கு எதிராக தீரமுடன் போராடிய ஆபிரிக்க விடுதலை இயக்கங்களான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் அமைப்பு என்பவற்றை ஏளனத்துக்குள்ளாக்குகிறது. எல்.ரீ.ரீ.ஈயினர் ஓர் விடுதலை அமைப்பு என எவ்வாறு கூற முடியும். அவர்களின் வன்செயல் நடவடிக்கைகளும், தங்கள் கோரிக்கைகளை மக்கள் முன் வைத்து பரீட்சித்துப் பார்ப்பதற்கு ஜனநாயக வழி நின்று கலந்து உரையாடி அவர்களின் அபிப்பிராயத்தை அறிவதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவிப்பதும் விடுதலை அமைப்பு என்ற கூற்றையே பொய்யாக்கி விடுகின்றது., எனப் பேசியுள்ளார்.

அன்புச் சகோதரமே சிந்தித்துப் பார்! எவ்வளவு தூரத்திற்கு சந்திரிகா உண்மைகளை மூடிமறைத்து தனது இனஅழிப்பை நியாயப்படுத்த முற்படுகின்றார். இந்த நேரத்தில் நானும் நீயும் தான் எங்கள் மக்களின் குரல். நானும் நீயும் தான் எங்களுக்காகத் தங்கள் இன்னுயிர்களையே தந்து போராடும் எங்கள் விடுதலைப்புலிகளின் குரலாக வேண்டும். புரிகின்றதா உன் பொறுப்பும். என் பொறுப்பும். பேச நேரமில்லை. செயல்வேண்டும். செயல் திட்டங்களுக்கு மதியும் நிதியும் வேண்டும். காலத்தை ஒதுக்குவோம் வா! இயலுமான அளவுக்கு அதிக அளவு காசினைக் கேட்காமலே கொடுப்போம். சந்திரிகாவின் பேயாட்சியை தமிழீழ மண்ணில் வேரறுப்போம். அவரின் பொய்ப் பிரச்சாரத்தை உலகிற்கு எடுத்து விளக்குவோம்.

அன்பின் ஆசிரியர்




எம்மண் மீட்க....
எம்மண் மீட்க
எரிந்த தீபமொன்று
அன்னவரின் இலட்சியத்தை
இதயத்தில் நிறுத்திக்கொண்டு
செங்களமாடுகின்ற
வீரத்தை அறியீரோ
மக்கள் புரட்சித்தீ—எம்
மண்ணுக்காய் எழவேண்டும்.

—இராசன், இங்கிலாந்து.

விழுதாய் இரு தமிழா
பழுதான எண்ணத்தைத் தூர எறி
தொழுதால் வராது மண் மீட்பு
சிலதுகள் சிதறின சிந்தை மற—நீ
உழுதுண்டு, உறங்கிய மண்மீட்க
பலதுண்டு செய்திட! அழுவதா உன்பணி
வலதுகாலை எம் மண்ணில் பதிக்கையில்
எழுதியிருக்க வேண்டும் அங்குன் உழைப்பு!

—ஈழபாரதி

எம்மண் மீட்க தம்மையே தந்தவர்கள்
அன்னைதந்தை தமிழிலே கண்டவர்கள்
செங்களத்தில் சிங்களத்தின்
சேனைகளைக் கொன்றவர்கள்
கண்விழித்து இரவுபகல்
களத்திலே நின்றவர்கள்
செங்குருதி சிந்திவீழ்ந்தபின்னும்
விண்மீனாய் மிளிரும் மாவீரர்.

—காவலூரர் காளிதாசன்.


## எம்மண் மீட்க....

புதுமையும் புரட்சியும் பசுமையும் பைந்தமிழும்
எழில்கோலம் பூண்ட ஈழத்திரு நாட்டினிலே
செம்மண்ணும் செந்தமிழும் செங்கொடியும்
செழிப்புறவே
செங்குருதி சிந்தி சிவந்து எம்தேசம்
ஈழத்தாய் விலங்கறுக்க ஈகம்செய்த வீரர்இனம்
உயிருக்கும் மேலாம் உரிமைமண்ணை
நேசித்தார்
உத்தமரின் கனவதனை நனவாக்க
பணிசெய்வோம்
தமிழினமே கோமகனின் கரம்தனைப்
பலப்படுத்து!

—செ. ஈழமணி, பிரான்ஸ்.

# "ஜெயசிக்குறு புதைவையும் யாழ் குடா மீட்பையும்

வன்னிப்பெரு நிலம் மீண்டும் ஒரு தடவை ஆக்கிரமிப்புப் படைக்கு பெரும் புதைகுழியாக மாறியுள்ளது. 27-09-98 அன்று அதிகாலை கிளிநொச்சி-பரந்தன்-ஆனையிறவு-இயக்கச்சி கூட்டுப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் கிளிநொச்சி-பரந்தன் தளம் விடுதலைப் புலிகள் வசம் முற்றாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்தத் தாக்குதலில் 1500க்கும் மேற்பட்ட சிறிலங்காப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 15 கி.மீ தூரம் அமைந்திருந்த இராணுவ நிலைகள், முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் களமெங்கும் பரவிக்கிடந்துள்ளன. கொல்லப்பட்ட படையினரைத் தேடி எடுத்து செஞ்சிலுவைச்



சங்கத்தினூடாக கையளிக்கப்பட்டன. 1000க்கும் மேற்பட்ட உடல்கள் கைப்பற்றப்பட்டுள்ள போதும் 600-700 வரையான உடல்கள் செஞ்சிலுவைச்சங்கத்தினூடாக படையினரிடம் கையளிப்பதற்குரிய நிலையில் இருந்தன. பெருந்தொகையான ஆயுதங்கள், வாகனங்கள், கிளிநொச்சித் தளத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இத்தாக்குதலின் மூலம் கிளிநொச்சிப் பிரதேசம் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டினுள் வந்துள்ளது. பரந்தனுக்கும் ஆனையிறவுக்கும் இடையிலான இராசாயனத் தொழிற்சாலையிலேயே தற்போது இராணுவத்தினரின் முன்னணிக் காவல் அரண் உள்ளது. நடாத்தப்பட்ட தாக்குதலின் பரிமாணத்தையும் நடந்த பிரதேசத்தையும் நோக்கும்போது 1996ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடைபெற்ற முல்லைத்தளத்தின் மீதான தாக்குதலைவிட பாரிய தாக்குதலாக இத்தாக்குதல் அமைந்துள்ளது. இத்தாக்குதலுக்கு சூட்டப்பட்டுள்ள ஓயாத அலைகள்-2 எனும் பெயரும் மிகப் பொருத்தப்பாடு உடையதாக அமைகிறது.

ஓயாத அலைகள்-2 மிகவும் திட்டமிட்டு நடாத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தளமும் மிகவும் முக்கியமானதாகவே இருக்கிறது. தாக்குதலின் பூரண இலக்கு பரந்தன் சந்தி வரையிலான பிரதேசங்களை விடுவிப்பதாகவே இருந்திருக்கிறது.

கிளிநொச்சி-பரந்தன் படைத்தளம் 1996ஆம் ஆண்டு 'சத்ஜெய' படை நடவடிக்கை மூலம் அமைக்கப்பட்ட படைத்தளமாகும். 1998ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இத்தளத்தின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்டு கிளிநொச்சி நகரின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது.

படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த படைத்தளம் எந்த நேரமும் விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்துக் காத்திருந்த தளமாகும். விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினால் படையினர் பின்வாங்க, அப்பகுதிகளை ஆட்லறி மழை பொழிந்து விடுதலைப் புலி வீரர்களை அழித்தொழிக்கும் திட்டமும் சிங்களப் படைத் தலைமையிடம் இருந்ததாகத் தெரிகிறது. இதற்கேற்ப ஆனையிறவு ஆட்லறி தளமும் தயாராக இருந்திருக்கிறது. மேலும், விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தின் அதனை எதிர்கொள்ளும் விதமும் இராணுவத் தரப்பால் நன்கு விவாதித்துத் திட்டமிடப்பட்டிருந்தது.

இத்தகைய நிலையிலேயே மிக நீண்ட ஒரு நிலப்பரப்பில் விடுதலைப் புலிகள் தமது தாக்குதலை நடாத்தியிருக்கின்றனர். இத்தாக்குதல் கிளிநொச்சி-பரந்தன், பகுதியில் ஊடறுப்புத் தாக்குதலாக இருக்கும்போது ஆனையிறவுப் படைத்தளத்தில் தயாராக இருந்த ஆட்லறித் தளம் மீதும் விடுதலைப் புலி வீரர்கள் தாக்குதல் நடாத்தியிருக்கின்றனர். ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்து ஆட்லறித் தளம் அழிக்கப்பட்டதும் தாக்குதலை முறியடிப்பதற்கு படையினர் வகுத்திருந்த திட்டத்தில் பிரதான பாத்திரத்தை வகிக்க இருந்த ஆட்லறிகள் செயலிழந்துபோயின. படைத்தளத்தினுள்ளும் சமர் கடுமையானதாக இருந்திருக்கிறது. ஒரு கட்டத்தில் நீண்டு அமைந்திருந்த படைத்தளத்தினை விடுதலைப் புலிகள் இரண்டாகப் பிளந்து கிளிநொச்சிப் பகுதியினைத் தனிமைப்படுத்தியிருக்கின்றனர். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட பின்னர் கிளிநொச்சிப் பகுதியில் பரவலாகப் படர்ந்திருந்த இராணுவ நிலைகள் பெருந்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்து உதவிக்கு விரைய முற்பட்ட படைகள் விடுதலைப் புலிகளினால் தடுத்து நிறுத்தப்பட்டு தாக்கி அழிக்கப்பட்டிருக்கின்றது. இதனால், தனிமைப்படுத்தப்பட்ட பகுதியினை மீட்டெடுப்பதற்கு மேலதிக படைப்பலமும் படையினருக்கு போய்ச் சேரவில்லை. இதனால் தப்பி ஓடுவதற்கு முடியாதுபோன படைகள் இத்தாக்குதலில் அழிந்து போயின.

இத்தாக்குதலில் விமானப் படையினரும் படைத்தரப்பிற்கு உதவி வழங்க முடியவில்லை. ஒரு தடவை விமானப்படை விமானம் ஒன்று உதவிக்கு வந்ததாகவும் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதல்களினால் அவ்விமானம் பின் வாங்கிச் சென்றதாகவும் தெரிகிறது. இவ்வாறு இவ்விமானம் பின்வாங்கிச் சென்ற பின்னர் மேலதிக விமானங்கள் எதுவும் படையினருக்கு உதவியாக களத்திற்கு வரவில்லை.

கிளிநொச்சி-பரந்தன் படைத்தளம் மீதான தாக்குதல்கள் படைத்தரப்பின் இராணுவத் திட்டத்தினையே ஆட்டங்காண வைக்கக் கூடியவை. ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை வவுனியா - கிளிநொச்சி இணைப்பை நோக்கமாகக் கொண்டிருந்தது. இன்று கிளிநொச்சியே முழுமையான விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாகிவிட்டது. ஜெயசிக்குறு ஆரம்பமாகி 17ஆவது மாதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும் இதுவரை தனது இலக்கை அடையவில்லை. கிளிநொச்சி நோக்கிய இலக்கில் இன்னும் சிறிது தூரம் முன்னேறினால் கிளிநொச்சிப்பகுதியில் இருந்தும் தமக்கு உதவி கிடைக்கும் எனப் படையினர் எதிர்பார்த்திருந்தனர். இச் சூழலில் கிளிநொச்சி-பரந்தன் படைத்தளம் மீதான தாக்குதல் ஜெயசிக்குறு படை நடவடிக்கைக்கு பலத்த பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியதாகும்.

மேலும், இப்பாரிய தாக்குதல் படையினருக்கு தெளிவாக ஒரு செய்தியினைக் கூறியிருக்கிறது. பாரிய நிலப்பரப்பில் பரந்து அமைந்திருக்கும

## கட்டியம் கூறும் ஓயாத அலைகள் -2

படைத்தளத்தை தாக்கி அழிக்கக்கூடிய சக்தியினை விடுதலைப் புலிகள் மேலும் வளர்த்தெடுத்திருக்கின்றனர். இதனை அடிப்படையாக நோக்கும்போது ஆனையிறவுத் தளம் கூட எதிர்காலத்தில் விடுதலைப் புலிகள் வசம் விழக்கூடியதே. அவ்வாறு விழின் தென்மராட்சிப் பகுதியினை விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவது இலகுவானதாகிவிடும்.

இந்த வகையில் நோக்கும்போது கிளிநொச்சி-பரந்தன் படைத்தளம் மீதான தாக்குதல் ஜெயசிக்குறு படை நடவடிக்கையினை முறியடிப்பதற்கும், யாழ்ப்பாண மீட்பை முன்னுணர்வதற்கும் கட்டியம் கூறும் தாக்குதலாகும்.

— வேந்தன் —

## இனமாக எழுவோம் வாரீர்!

புலம்பெயர் நிலத்தில்
வலம்வரும் தமிழா
புலர்ந்தது புலர்ந்தது விழி நீ!

நிலந்தனை மீட்பது
நிச்சயம் என்று
நிகழ்ந்தது பெருஞ்சமர் எழு நீ!

அலைந்திடும் இனமாய்
அடுத்தவர் நிழலில்
அமர்ந்திடல் எதுவரை புரி நீ!

கலைந்திடும் கனவில்
கற்பனையுலகிற்
கலைந்தனை-கண்களை விரி நீ!

புலம்புது சிங்களம்
பொருமுது பௌத்தம்
பதிந்தது புலிகளின் வீரம்!

கலங்கிய கண்களைக்
கழுவியே வீரரின்
முகங்களைத் தழுவுது தாய்மண்!

கிளிநொச்சி பரந்தன்
அடிவைத்து நடந்து
அழிவுக்கு வழி செய்தாள் அரக்கி!

துளியச்சமின்றி
தொடர்யுத்தமாடி
தனிவெற்றி கொண்டார் புலிகள்!

கிளிநொச்சி மீட்பில்
கிளைவிட்ட தேர்தல்
அடியற்றுப் போகும் குறி நீ!

புளிவைத்துப் புரண்ட
ரத்வத்த முகத்திற்
கரிவைத்த காண்டம் அறி நீ!

உலகெங்கும் அலைந்தே
பலகோடி செலவில்
பலங்கொண்டு வந்தாள் பாவி!

நிலமெங்கும் 'செல்'லும்
நெருப்பெறி கணையும்
பொழிந்தெம்மை யழித்தாள் தூவி!

நிலைகொண்டு ஆளும்
நினைவோடு எங்கள்
வளவுக்குட் புகுந்த பேய்கள்

தலைகொய்து மீண்டும்
தமிழ் கொண்டு வாழத்
தாயகம் காத்தார் புலிகள்!

சடலங்கள் வீழ
சேதங்கள் சூழ
விடைகொண்டு செல்லும் படைகள்!

அட எங்கள் ஈழம்
எமதென்று கூவி
ஏற்றினார் கொடியெங்கள் வீரர்!

ஓயாத அலைகள்
ஊடாக முல்லைத்
தாய் சோகம் துடைத்த தலைவன்
தேயாத தலைமைத்
தெளிவோடு மீண்டும்
புயலாகித் தொலைத்தான் பகையை!

நாம் வாழத் தம்மை
நமக்காகக் கொடுத்து
நம்மண்ணைக் கலந்த வீரர்
மாவீரம் நினைந்து
அவரகம் பணிந்து
இனமாக உழுவோம் வாரீர்!

'உலகோடு திரண்டு
பகை வந்தபோதும்
உலராது தமிழீழத் தாகம்'
என அங்கு திரளும்
எமதன்பு இனத்தின்
உணர்வோடு இணைவோம் வாரீர்!

- புலவர்-